பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com மே 2019



## பிரமிக்கச் செய்யும் ஓர் இலக்கியத் தொழிற்சாலை

## ராஜகவி ராகில்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | மே 2019

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸுர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி – தமிழ்ச்சிட்டு**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.







இம்மூன்றுநூல்களையும் http://tamilnenjam.com/?page_id=4546 இணையதளத்திலிருந்து தரவிறக்கம் (download) செய்துப் படிக்கலாம். முதலிரண்டு நூல்கள் தேவையென்றால் நூலுக்கான விலை + அஞ்சல் செல்வுக்கான தொகை அனுப்பிக்கேளுங்கள் அனுப்பி வைப்போம்.

e-mail : editor@tamilnenjam.com / Cell :+91 9791369818

# நோத்ர தாம்

எரிந்து தணிந்தது
எண்ணூறு ஆண்டு நினைவு!
அதன் புகையின் வெண்மையில்
அவள் குழந்தைகள் பால் குடிக்க,
உள்ளுரைந்த செந்தழல்
அவள் உயிரை உறிஞ்சிவிட்டது.
அவள் சுமந்த நினைவுகளை
இறக்கிவைத்துவிட்டாள்,
சிலுவைப்பாரம் அவளையும்
அழுத்தியிருக்கக்கூடும்!
அவள் கண்ட போர்களை
காற்றுக்குத் தாரை வார்த்துவிட்டாள்,
போரைவிட ஆட்டுக்குட்டிகள்
அவளை இன்னும் கவர்ந்திருக்கக்கூடும்!
மேற்கின் ரோஸ் ஜன்னல் வழியே
எட்டிப்பார்க்கிறாள்,
கிழக்கின் சூரியனை தன் தழலால்
வென்ற மமதையோடு...
வெறும் கடிகார முள் கொண்டு
காலத்தை அளப்பவனை
ஏளனம் செய்கிறாள்!
தன் கோபுரம் சரிந்ததில்
கோபம் கொப்பளிக்கவில்லை,
சரித்தவர்கள் மீதும்
வருத்தம் துளியுமில்லை,
நினைவுச்சின்னமாய் வாழ்ந்தவளுக்கு
நினைவாய் வாழ்வதில்
துன்பம் ஏதுமில்லை...

அவள் சிரித்துக்கொண்டு தான்
இருக்கிறாள்...
இருந்தும், அவளின் பொசுங்கிய
கற்சுவர்களின் மீது
நான் மட்டும் ஏனோ
தீயாகிப்போனேன்!



– நவீனா

# லப்... டப்...

## நூல் மதிப்புரை

### சக்தி அருளானந்தம்




கவிஞர் எஸ்.உதயபாலா அவர்களின் கவிதைத் தொகுப்பு ‘லப் டப்’. காதலின் துடிப்பை வெளிப்படுத்தும் இந்தத் தொகுப்பிற்கு இதயத்தின் துடிப்பான லப் டப் ஒலியை தலைப்பாக வைத்திருக்கிறார் கவிஞர்.

கவியுலகப்பூஞ்சோலைமுள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் வெளியிடப்பட்ட நூல்களுள் ஒன்று. தமிழ்நெஞ்சம் வெளியீடு. இதயத்துடிப்பு போலவே சிறு சிறு கவிதைகள்..மொத்த தொகுப்பும் காதலையே பேசுகிறது.

கண்ணில் பட்ட முதல் கவித்துளி சட்டென அடுத்த பக்கத்தை புரட்ட முடியாமல் சற்று நிறுத்தியது.

❤ ‘‘கருப்பனும் கருப்பாயிமே
இவ்வையத்தின்
முதல் படைப்பாளிகள்’’

ஆதாம் ஏவாளை முதல் மனிதர்கள் என்பது போல கருப்பனும் கருப்பாயியையும் முதல் படைப்பாளிகள் என்கிறார்.மெய்தானே.. நமக்கு அவர்கள் தாமே முன்னத்தி ஏர்.

தன் முன்னுரையில் கவிஞர் “இயற்கையின் வரம்தான் காதல்’’ என்கிறார். அத்துடன் காதலை எதிர்ப்போர் இவ்வையகத்தில் அநேகம் என்கிறார். அத்துடன் விட்டாரா காதல் மட்டும் இல்லாது போயிருந்தால் இந்த உலகம் என்றோ அழிந்துபோயிருக்கும் என்கிறார். காதல் தெய்வீகம் என்பவர்கள் ஒருபுறமிருக்க, அது ஹார்மோன் சேட்டை என்பவர்களும் இருக்கிறார்கள். ஏட்டில் பாட்டில் திரையில் காதலைக்கொண்டாடுபவர்கள்அவரவர்வீட்டில் என்றால் வெட்டரிவாளை எடுக்கிறார்கள்.இந்த முரண்தான் காதலின் வசீகரம்.

மேலும் கவிஞர் காதல் உணர்வு இளமைக்கு மட்டுமல்ல முதுமைக்கும் உண்டு என்கிறார் கவிஞர்.

பாவேந்தரும்“காதல்அடைதல்உயிரியற்கை” என்பார்.அவர் முதுமைக் காதலை

❤ ‘‘புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு
சதிராடும் நடையாள் அல்ல
தள்ளாடிவிழும் மூதாட்டி’’ என்பார்.

காதலை மட்டுமே எழுதும் கவிஞர்கள் தபூ சங்கர் போல சிலர் இருக்கிறார்கள். காதல் எனும் ஒற்றைப் பாடுபொருளை கொண்டதாக பல தொகுப்புகள் உண்டு. அவை அநேகமாக கவிஞர்களின் முதல் தொகுப்பாக இருக்கும்.இது கவிஞரின் இரண்டாம் தொகுப்பு. இதற்கு முன்பு ‘நிலாச்சோறு’எனும் தொகுப்பு வந்துள்ளதை தமிழ்நெஞ்சம் அமின் அணிந்துரை வழியாக அறியமுடிகிறது.

தொகுப்பிலிருந்து சில துளிகள்...

❤ ‘‘ஒவ்வொரு வார்த்தையும்
கவிதையாகிறது
உனை எழுதும்போது...’’

♥ “உலகப் பூக்களின்
ஒருதுளி
தேன்சொட்டு அவள்.”

♥ “உன் வெட்கத்தில் பிறக்கிறது
சிணுங்கல் எனும்
முதல் குழந்தை.”

♥ ”வாடைக்காற்று
சாடையாய் சொல்லிப்போகிறது
நீ வந்து சென்றதனை.”

♥ “அவளுக்கும் எனக்குமான
போட்டியில்
நான் முன்னிலை அவள் வெற்றி.”

♥ “திருவிழா கண்டுவிட்டால்
அன்றையபொழுது
திருவிழாதான்.”

இப்படிக் காதலை திருவிழா போல கொண்டாடி குதூகலிப்பவர் தன் காதலியிடம் சொல்கிறார்.

♥ “உனக்கு கொடுக்க என் காதலைவிட
என்ன இருக்கப்போகிறது
இவ்வுலகில்” என்கிறார்.

கோடை வெயில் கொளுத்துகிறது. அந்தக் கொடுமையான வெயிலும் இதமாக இருக்கிறதாம் அவள் நினைவுகளால்.

♥ “கோடை வெயிலும இதமானது
உன் நினைவுகளின்
சாரல் மழையால்.”

கவிதைச் சாரல் நம்மையும் நனைக்கிறது. வாழ்த்துகள் கவிஞருக்கு.

வெளியீடு : தமிழ்நெஞ்சம், பிரான்சு
email : editor@tamilnenjam.com

udhayabala.ub@gmail.com
விலை 90/-

பள்ளி மாணவர்கள்
மதிய உணவு சாப்பிட
ஆதார் அட்டை கட்டாயம்
- ம.அரசு

நல்லவேளை. விக்கல் வந்தா தண்ணி குடிக்க பான் கார்டு கட்டாயம்னு சொல்லல...

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர்

# எட்டாவழிச்சாலை

எட்டு வழிச்சாலை
எங்களுக்கு வேண்டாம்
என்றவளை எட்டி
உதைக்குதம்மா
பூடிசு

குருவி அடைகிற கூட்டை
கலைக்காத சாமி
என்றவளை
புழுதியில் புதைக்குதம்மா
போலிசு

மரத்த வெட்டாத
மழை கிடைக்காது
என்றதற்கே
ஜெயிலில் அடைக்குதம்மா
கேசு

காட்டை அழிச்சி
ரோட்டை போட்டு
அவங்க கல்லாவில்
நிரம்புதம்மா
காசு

**- லாயர் சரவணன்**

# பாரதியின் தேசிய அறம்

– இசைவாசி

"திறம் பாடவந்த மறவன் புதிய அறம் பாடவந்த அறிஞன்" என்று கனகசுப்புரத்தினம் பாரதியின் சமூக அறச்சிந்தனையை இவ்வாறு சுட்டிக்காட்டுகிறார். பாரதிக்கு இயல்பிலேயே தேசச்சிந்தனை உண்டு. விடுதலை வீரர்களையும் அவர்களின் அரசியல் ஆவேசத்தையும் தனது எழுத்துகளில் காண்பித்தான். அவைகளை மக்களுக்கு பரப்பவும் செய்தான். "பாதகம் செய்பவர்களைக் கண்டால் பயம் கொள்ளல் ஆகாது பாப்பா" என்கிற ரௌத்திரம் அவனுக்குள் இருந்தது. வணிகம் செய்ய வந்தவன் அரசியல் சட்டத்தை இயற்றி நம்மை ஆள்கிறானே என்கிற துடிப்பு அவனுக்குள் தீ மூட்டியது.

மாதரையும் மக்களையும் வன்கண்மையாற் பிரிந்த
மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் கண்கிலையோ

என்று தன் வாழ்வு வறுமையில் கிடந்தாலும் தேசத் தலைவர்களின் இன்னல்களைக் கண்டு வெதும்பிய பாரதி, தமிழகத்திலும் இந்தியாவிலும் விடுதலை உணர்வை எழுத்தால் மூட்டிட முடியும் என்பதை ஆங்கிலேய அரசுக்கு உணர்த்தினான். 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களின் அரசியல் சூட்சுமங்களைக் கனித்து அதை நாட்டுக்குடிகளுக்கு உரைக்கச் சொல்லி பல மக்கட்கட்கு அரசியல் புரிதலை தந்தவன் பாரதி என்று துணிந்து சொல்லலாம். "மாணவர்கள் அரசியலில் ஈடுபட வேண்டியதில்லை. அரசியல்தான் நாட்டுக்கு அஸ்திவாரம். அதைப்பற்றி மாணவர்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அரசியலைப் பற்றி சிந்திக்காமல் இருப்பது ஆபத்து" என்று காந்தி சொன்னார். இந்தியாவின் ஒற்றுமையை சீர்க்குலைக்க நினைத்து ஆங்கிலேய அரசு வங்கப் பிரிவினையைத் தூண்டியது. அந்தத் திட்டத்தை எதிர்த்து சென்னை மெரினாவில் மாணவர்கள் போராடிய போது தலைமை தாங்கி உரை நிகழ்த்திய பாரதி மாணவர்களுக்குப் பண்பாட்டு அரசியல் நோக்கத்தை புரிய வைத்தான்.

விடுதலை போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அரசியல் சூழலில் மாற்றத்தை கொண்டு வந்த சிங்காரவேலர் மக்கள் எந்த சூழலிலும் வேறுபட்டு விட்டுக்கூடாது என்று "சுயராஜ்யத்தை பாதுகாக்க ஒரு மக்கள் படை இன்றியமையாதது" என்கிற கருத்தை பதியவைக்கிறார். ஜல்லிக்கட்டுப் பிரச்சனையில் தமிழகம் ஒற்று கூடியது, மகாராஷ்டிராவில் 35000 விவசாயிகள் ஒற்றிணைந்து 180 கிலோ மீட்டர் நடந்தே சென்று போராடி தீர்வு கண்டார்கள். மக்களின் பிரிவு தவறான அரசியல் நோக்கத்தை ஏற்படுத்தி விடக்கூடாது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே" என்று புரட்சிகவி ஒன்று சேரும் சிந்தனையைக் கொடுக்கிறான். அரசியல் சீரழிவுகளைக் கண்டு நாம் ஒன்று சேர வேண்டும் என்பது பாரதியின் அறிவுறுத்துதலாகும். புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாநிலம் கடந்து உதவிக்கரம் நீட்டுகிறார்கள் என்றால் ஒற்றுமையின் சிறப்பை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். "சோர்வும் வீழ்ச்சியும் தொண்டனுக்கில்லை" இன்றைய அரசியல் சீர்த்திருத்தவாதிகளுக்கு பாரதியின் ஊக்கம் கொடுக்கும் வரிகள் இவை. தன்பெண்டு தன் பிள்ளை தான்என்று இருக்கும் அரசியல் தலைவர்களை இந்தச் சமூகம் பார்த்து கொண்டுதான் இருக்கிறது என்பதற்கு பல ஊழல் குற்றச்சாட்டுகளை நாம் எடுத்துக்காட்டாக வைத்திருக்கிறோம். "எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்று எந்த அரசியல் பொறுப்பு

வகிக்காத பாரதி சமுதாயப் பொறுப்போடு வாழ்ந்தான் என்பதுதான் அவனுடைய அற வாழ்க்கைக்கு மாட்சியாகிறது.

"வங்கத்திலே ஓடிவரும் நீரின் மிகையால்
வையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"

இவ்வரிகள் பாரதியார்ன் தேசிய சிந்தனைக்கு சான்று. நதிகளை வைத்து அரசியல் செய்யும் ஆட்சியாளர்கள் பாரதியின் தேசிய சிந்தனையைப் பின்பற்றி நடந்திடும் நாள் எந்த நாளோ?. விஞ்ச் ஆளுநரை சந்தித்தார் வ.உ.சி. அவர்கள் இருவரின் உரையாடல்களையும் பாரதி தன் கவிதையிலே சொல்லும் போது விஞ்சிற்கு வ.உ.சி பதில் இப்படி இருந்ததாக பாரதி குறிப்பிடுகிறான்.

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?


நீங்கள் மட்டும் மனிதர்களோ இது நீதிமோ? என்று. சொந்த நாட்டில் மக்கள் அடிமையாக வாழ நேரிட்டால் அதைவிட அரச துரோகம் இருந்து விடாது. இலவசத்திற்கும் நிவாரணத்திற்கும் சாலைகளில் நின்று கையேந்துகிற நிலை நம் நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அரசின் பிற்போக்குத்தனத்தை எதிர்க்காமல் விதி வந்த வழி வாழும் மக்கள் சகித்துக் கொண்டு சதா வயிற்றிற்காக மட்டும் வாழும் சிறுமை வாழ்க்கை தான் வாழ்கிறார்கள். ஆனால் பாரதி அப்படி இல்லை. வேடிக்கை மனிதரைப் போல நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ? என்றும் "மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள் ஆங்கே ஆகவென்று உதித்தது பார் யுகப்புரட்சி" என்றும் தன்னை ஆங்கிலேய அரசை எதிர்த்து பேசி புரட்சியளனாய் அடையாளப்படுத்தி கொண்டான்.

"மனித சமுதாயத்தில் ஒழுக்கமும், நல்ல அரசியலும் ஏற்பட வேண்டுமானால் அய்யோக்கியர், துரோகிகளை, மானமற்ற இழிமக்களைப் பொதுவாழ்வில் தலைகாட்டாமல் விரட்ட வேண்டும்" தமிழகத்தில் பல அரசியல் ரீதியான கொள்கைகள் ஏற்பட காரணமாக இருந்த பகுத்தறிவு பகலவன் பெரியார் இப்படி அரசியல் அழுக்கர்களை ஏசுவார். மக்களை சாதியால், மதத்தால், இனத்தால், மாநிலத்தால் பிரித்தாளும் சூழ்ச்சிகளைக் கொண்டுள்ளவர்களுக்கு பாப்பா பாட்டில் பாரதி சொல்கிறான் "உயர்வு தாழ்வு கொள்ளல் பாவம்" என்று. தமக்கென முயலா நோன்றான் பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" என்று அரசனுக்கு புறநானூறு வரையறை செய்கிறது. பாரதி "எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்" என்பான்.

மன்பதை காக்கும் அரசர் தாம் அற
மாட்சியைக் கொன்று களிப்பாரோ?

என்று தனது பாஞ்சாலி சபதத்தில் தர்மன் செய்த சூதின் இழிசெயலை பாஞ்சாலி இடித்துரைத்து சொல்வதைப் போல பாரதி எழுதியிருப்பான். நல்ல மன்னன் என்பவன் நாட்டிற்கு அரணாக இருந்து, நாட்டு வளர்ச்சிக்கும் மக்களின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருக்க வேண்டும்.





## அவளும் ஆறும் அழகு

அவள்
வாக்கப்பட்டு
போகப்போறஊருக்கு
அவளோடு சென்றிருந்தேன்
அந்த ஊரும் ஆறும்
ஆரத்தியெடுக்கும்
அழகோடிருந்தது
ஆற்றரிகில்
வேர்கடளை செடியை
வேரோடுபிடிங்கி
உளர்த்தி உரித்து கொடுத்தாள்
பால்மணம் நுகர
பசிகழிந்து
பம்புசெட்டில் பாந்தோடும் நீர்பறுகி
பழகி பொழுது கழித்தோம்
அப்போது தெரியாது
அவள் வாக்கப்பட்டு போகும் ஊர்
அதுவென்று
இப்போது அந்த ஊரில் இரண்டழகு
ஆறும் அவளும்
ஒரு எட்டு பார்க்கத்துடிக்கிறது மனசு
ஆறு அனுமதிக்கும்
அவள் அனுமதிப்பாளோ

**ஆயுதா கவி - அன்பு மதி**

“பிணியின்மை செல்வம் விளைவின்ப ஏமம்
அணியென்ப நாட்டிற்குஇவ வைந்து”

மக்கள் நோயின்றி வாழ்தல் மக்கள் பொருள் வளம் பெற்றிருத்தல் விளைபொருட்கள் மிகுந்திருத்தல் கல்வி மற்றும் கலைகளை அனுபவத்து மகிழ்தல் மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாடு அவசியம் பெற்றிருக்க வேண்டிய அடிப்படை தேவைகளகும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். மேற்சொன்னப்பட்ட ஐந்தும் இல்லாத நாடு ஆபத்தான நாடு ஆகும். நல்ல தலைவன் இல்லாத நாடு அதைவிட ஆபத்தானதாகும்.

தனிமனித தேவைகளைப் பூர்த்தியானல் அங்கு நல்ல அரசியல் நடக்கிறது என்று அர்த்தப்படும். பாரதி, பீஜித்தீவில் மாட்டிக்கொண்ட கொத் தடிமைகளைப் பற்றி கவலைப்படுகிறான்: ரஷ்ய போர்க்கு வருத்தப்படுகிறான். உலக அரசியல் சித்தாந்தம் பாரதிக்கு உண்டு என்பதற்கு இந்நிகழ்வுகள் ஒரு சான்றாகிறது.

“ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விசாலைகள் சமைப்போம்”

என்று நம் நாட்டிற்கான தொழில் முன்னேற்றத்தை கனவு கண்டவன். “ஆணுக்குப் பெண் இளைப்பில்லை” என்று பெண் முன்னேற்றத்தை உரைத்தவன். “மேலை கடல்கள் முழுவதும் கப்பல்கள் விடுவோம்”, “சந்திர மண்டலத்து இயல்கண்டு தெளிவோம்” என்கிற விஞ்ஞான முன்னேற்றத்தை பேசியவன். ஒரு நாட்டிற்கு தேவையான அடிப்படை கொள்கைகளை பாரதியாரின் கவிதைகளில் காணலாகின்றன. அரசியல் தலைவனாக தன்னை உள்ளுறப்படுத்தி கொண்டு பாரதி சிந்ததித்து வாழ்ந்திருக்கிறான். ஊருக்கு உழைத்திடல் யோகம். தேசத்தைக் காத்தல் செய் என்று சொல்லிய பாரதி நம் நாட்டை நாமே ஆளும் காலம் என்று வருமென்று ஏங்கியவனாவான். “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்” என்று இளங்கோவடிகள் கூறுவதை போல அரசியலில் பிழைப்போர்க்கு அந்த அறம் என்ன செய்யப்போகிறது? ■



# பக்கம் பக்கமாய்

**சோலச்சி**

**சை**க்கிள் கடை வைத்திருக்கும் மாரியப்பன், மணிக்கு ஒரு ரூபாய் வீதம் சைக்கிள்களை வாடகைக்கு விட்டு வந்தார். நண்பர்களோடு தானும் வாடகை சைக்கிள் எடுத்து ஓட்டுவதற்கு பழகிக்கொண்டான் பேரறிவாளன். யாராவது சைக்கிளைக் கொடுத்து கடையில் பொருள் வாங்கிவரச் சொன்னால் போதும்... சைக்கிளை மிதித்துக் கொண்டு கைகளை விரித்தபடி சிட்டாய் பறந்து செல்வான். சைக்கிள் ஓட்டுவதென்பது ஏரோபிளேன் ஓட்டுறதுக்குச் சமம் என்பான்.

இவன் சைக்கிள் ஓட்டும் அழகில் மயங்காதவர்களே இல்லை. ''எந்தச் சிரிக்கியோட வலயில சிக்கப்போறானோ... ஏன்டி... செல்வி ஓம்மவனுக்கு நெதமும் திட்டி சுத்திப் போடுடி. ஊரு கண்ணே அவன்மேலதான் மண்டிக் கெடக்குது.'' பக்கத்து வீட்டு அமிர்தம் சொன்னாள்.

“நீ சும்மாரு அயித்த. எப்பப் பாத்தாலும் அதயேதான் சொல்லிட்டு இருப்பே. சைக்கிளு ஓட்டுறது அவனுக்கு புடிக்குமுனு ஊருல உள்ளவுக எல்லாம் சைக்கிள கொடுத்து வேல வாங்குறானுக. ஏம் புள்ள என்ன ஓடும் புள்ளயா. ஊருக்கு ஒழைக்கவா பெத்துப் போட்டுருக்கேன்.பத்தாங்கிளாசு முடிக்கட்டும். மேல படிக்க அசலூருக்குத்தானே போகனும். எப்பாடுபட்டாவது அப்போதைக்கி நல்ல உருப்படியான சைக்கிள வாங்கி கொடுத்துப் புடுறேன்.”

பேரறிவாளன் பதினோறாம் வகுப்பு சேர்ந்ததும் முதல் வேலையாக சைக்கிளை வாங்கிக் கொடுத்தாள் செல்வி.

கூடலூரிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் பிலாக்குடியில் உள்ள பள்ளியில் தான் அறிவியல் பாடப்பிரிவு எடுத்து படித்து வந்தான். பொருளியல் பாடப்பிரிவு மாணவர்கள் ஆங்கில வகுப்புக்கு மட்டும் அறிவியல் பாடப்பிரிவு வகுப்பறைக்கு

வந்து விடுவார்கள். ஆங்கில ஆசிரியர் ஒருவர் மட்டும் இருந்ததால்தான் இந்த இணைப்பு வகுப்பு. பொருளியல் பிரிவு மாணவர்கள் பெஞ்சில் நெருக்கிக்கொண்டு உட்கார்ந்ததுபோக இடமில்லாதவர்கள் தரையில்தான் அமர்ந்தனர்.

அப்போதெல்லாம் பொருளியல் படிக்கும் சங்கீதா முதல் இருக்கையில் உட்கார்ந்திருக்கும் பேரறிவாளன் இருக்கைக்கு கீழே அமர்ந்து கொள்வாள். பார்வை ஆசிரியர் பக்கம் என்றாலும் சிந்தனை பேரறிவாளனைப் பற்றியதாகவே இருக்கும் அவளுக்கு.

அவள் தனது இடது கையால் பேரறிவாளன் கால்களை வருடிக்கொண்டே இருந்தாள். அவன் இடமாறி உட்கார்ந்தாலும் லாவகமாக நகர்ந்து அவனருகே சென்று விடுவாள்.

“ஏம்பா...ஒருஎடத்துலஇருக்கமாட்டியா. அங்கிட்டும் இங்கிட்டுமா நகர்ந்துக்கிட்டே இருந்தா. நா ஒன்னப் பாக்குறதா. இல்ல பாடத்த நடத்துறதா. வெளியில போயி பேண்டுல எதுவும் பிரச்சினைனா சரி பண்ணிக்கிட்டு அடுத்த கிளாசுக்கு வா. என்னப்பா சொல்லிக்கிட்டே இருக்கேன். வயசுக்கு வந்த புள்ளமாதிரி தலகுனிஞ்சு நிக்கிற. நீ போறியா... இல்ல நா போகவா.” கலாவதி டீச்சரின் சத்தம் அதிகமாயிருந்தது. நிசப்தமாக இருந்த வகுப்பறையிலிருந்து பேரறிவாளன் வெளியில் கதவு ஓரமாய் நின்றுகொண்டு இருந்தான்.

வழியில் செல்லும் ஆசிரியர்களும் மற்ற மாணவர்களும் இவனைப் பார்த்துக் கொண்டே சென்றதால் அவமானமாக கருதினான்.

“வெலகி வெலகி போனாலும் அந்தப் பொண்ணு எதுக்கு நமக்கிட்டயே வருது. நம்ம குடும்பம் இருக்க நெலமயில இந்த வயசுல அது ஒன்னுதான் கொறச்ச...” தனக்குள் பேசிக்கொண்டான்.

இணைப்பு வகுப்பு பேரறிவாளனுக்கு தர்மச்சங்கடத்தை உண்டாக்கியது. கலாவதி டீச்சரிடம் சங்கீதாவைப் பற்றி ஒருமுறை கூட சொன்னதே இல்லை.

“பொம்பளப் புள்ளைககிட்ட சூதானமா பழகனும்ப்பா. பொம்பளப் புள்ள பாவம் சும்மா விடாது. யாரு மனசயும் கலங்கப்படுத்திடாமநல்லபடியாபடிச்சுட்டு வந்துரு சாமி.” அவன் அம்மா சொன்னதை நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

அவளது வகுப்பறைச் சன்னலிலிருந்து இவனை பார்த்துக் கொண்டே இருப்பதை பெரும் பாக்கியமாக கருதினாள். சங்கீதாவும் அவனிடம் காதலை வெளிப்படையாகச் சொல்லவில்லை.

தன் நண்பர்கள் அவனை காதலிக்க

## ஹைக்கூ

ச. கோபிநாத், சேலம்

தண்ணீர் சுமக்கும் வாகனம்
பயணித்த தடமெங்கும்
இருண்டிருந்தது எதிர்காலம்.

•

கதறியழும் குழந்தை
காதுகளை மறந்தபடி
அலுவலகம் விரையும் அம்மா.

•

துள்ளித் திரியும் குழந்தைகள்
திக்கெட்டும் ஒளிவீசியது
குதூகலத்தின் சுடர்.

•

கூரைமேல் நிற்கும் சேவல்
கொக்கரிக்கும் கூச்சலில்
மனதிற்குள் உதித்தது பசி.

•

இதழை வருடும் காற்று
மனதுக்குள் தென்றலாய்
என்னவளின் நினைவுகள்

•

கட்டாயப்படுத்தினர். “இது பட்டிக்காடுடா. பன்னண்டாவது படிச்ச வொடன அந்தப் புள்ளய எப்புடியும் யாருக்காவது கட்டிக் கொடுத்துருவாங்க. அப்பதான்டா நமக்கு பதினெட்டு வயசே ஆரம்பிக்கும். எனக்குச் சோறு போடுறதுக்கே எங்க அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் நாக்கு தள்ளுது. இந்தக் கெரகத்துல காதலு வேறயா.. இது படிக்கிற வயசுடா..'' பேரறிவாளனின் கருத்து அனைவருக்கும் நியாயமானதாக தோன்றியது.

“அப்புடினா அந்தப் பொண்ணுக்கிட்ட உண்மையச் சொல்லிற வேண்டியது தானே. நா வேணா போயி சொல்லவா...” ஞானேஸ்வரன் குறுக்கிட்டான்.

“மாப்ள, அதுக்கான வாய்ப்பு அமையும்டா”

அந்த ஆண்டு நடக்க இருக்கும் ஆண்டு விழாவுக்கான போட்டிகள் மாலை நேரம் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

“என்னங்க... நீங்கதான் பாட்டுப்புக்கு பைண்டிங் பண்ணி நெறைய வச்சுருக் கீங்கள்ள. அத கொடுங்க. பாட்டுப் போட்டில சேந்திருக்கேன்” சங்கீதாவின் குரல்கேட்டு மறுப்பேதும் சொல்லாதவனாய் மறுநாள் கொண்டு வந்து கொடுத்தான்.

பாட்டுப் போட்டியில் பேரறிவாளனும் கலந்து கொண்டிருந்தான். மேல்நிலை வகுப்பு களுக்கான பாட்டுப்போட்டி தொடங்கியது. வரிசைப்படி பெயர் கூப்பிட ஒவ்வொருவராக பாட ஆரம்பித்தனர். பேரறிவாளனை அழைத்த போது அவனது நண்பர்களோடு சேர்ந்து சங்கீதாவும் கரவொலி எழுப்பினாள். மாணவிகள் அவளை “என்னடி...” என்பது போல பார்த்ததை அவள் பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

“பச்சமலப் பூவு நீ உச்சிமலைத் தேனு... குத்தங்குறை ஏது நீ நந்தவனத் தேரு... அழகே பொன்னுமணி....சிரிச்சா வெள்ளிமணி...” பேரறிவாளன் பாடும்போது அவளும் முனுமுனுத்தாள். அவனைத் தொடர்ந்து நான்கைந்து பேர் பாடினர்.

# நானிலு

●

மூத்த மகளுக்கு வரன்
உயர்ந்த சாதியில்
இளைய மகளுக்கு
தேடுகிறார் மனிதசாதியில்.

●

அண்டை வீட்டுக்காரர்
முறைத்தாலும்,
உரசியே சிரிக்கிறது
சுவர் ஓர செம்பருத்தி

●

புதிய புத்தகம்
ஆர்வத்துடன் திறந்தான்.
பக்கத்திற்கு பக்கம்
புதுவாசம் நுகர.

●

காலத்தில் கேட்கப்படாத
மன்னிப்பு.
பசித்தவனுக்கு நேரத்தில்
பரிமாறப்படாத இலை.

●

ஒருநாள் சகவாசம்
விரட்டியடித்தும்
வீடு வரை
நன்றி மறவா நாய்.

●

சூது மது மாது
தீயப் பழக்கமெனில்
குழந்தைக் கையில்
செல்பேசி?

**காரை. இரா.மேகலா**
காரைக்கால்



# ஹைக்கூ

■

சிதறிய முத்தங்கள்
காகிதம் பொறுத்துக்கொண்டது
பேனாவின் எச்சத்தை...

■

கடந்துப் போனப்பின்
தனித்தனியாய் அனாதையாகிறது
காலடிச் சுவடுகள்...

**- மகா**

சங்கீதா பாட ஆரம்பித்தாள். "இந்தப் பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப்பூவை தொட்டி லில் கட்டி வைத்தேன்... அதில் பட்டுத்துகிலுடன் அன்னச் சிறகினை மெல்லென இட்டு வைத்தேன்..." நீதிக்கு தலைவணங்கு படத்தி லிருந்து பாடினாள். பேரறிவாளனின் நண்பர் களில் ஒருவன் கைகளை தொட்டிலாக்கி ஆட்டிக் கொண்டிருந்தான்.

"சும்மா இருங்கடா..." மெல்லியதாய் சத்த மிட்டுக் கொண்டே இருந்தான் பேரறிவாளன்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு பேரறிவாள னிடம் வாங்கிய பாட்டுப் புத்தகத்தை கொடுத்தாள். அவளின் கண்கள் இளகிய பனியை ஒத்து இருந்தது. அவளின் உதடுகளில் முல்லை மலர்களை பூக்கச் செய்து நகர்ந்து சென்றாள்.

''மாப்ள கொடுடா. அதுல என்ன இருக்குனு பாக்குறேன்...'' வெடுக்கென பறித்தான் சுப்பிரமணி. ஒவ்வொரு பக்கமாக புரட்டினான். அதில் ஒன்றுமில்லை என்று உதடுகளைப் பிதுக்கினான்.

பேரறிவாளன் பாட்டுப் புத்தகத்தை வாங்கி பக்கங்களை காற்றில் விரிய விட்டான். அதிலொரு பக்கம் அதிகம் பயன்படுத்தியதற்கான அடையாளத்தோடு இருந்தது. உற்றுப் பார்த்தான். அந்தப் பக்கத்தில் மூன்று நட்சத்திர குறியீடுகள் இட்டு வட்டமிட்டு இருந்தது. வட்டத்தின் மேல் பறவைகள் இரண்டு பறப்பது போல் குறியீடும் இருந்தது.

எனக்கு ரொம்ப ரொம்ப பிடிச்சப் பாட்டு. இப்படிக்கு எஸ்.ஜி. என்பது ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. சங்கீதா என்பதைத்தான் அப்படி எழுதியிருந்தாள்.

"வச்சுக்கவா ஒன்ன மட்டும் நெஞ்சுக் குள்ள... சத்தியமா நெஞ்சுக்குள்ள ஒன்னு மில்ல..." யாரோ பாடுவது போலிருந்தது அவனுக்கு.

இவனைத் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே சென்ற அவளது கண்கள் இரண்டும் துள்ளி நடனமாடிக் கொண்டிருந்தன. பேரறிவாளனின் இதயம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வேகமாய் துடித்தது. தனது வலது கையை நெஞ்சில் வைத்து சாந்தப்படுத்திக் கொண்டான்.

நாட்கள் கடந்தன. பள்ளிக்கூடம் விட்டு வந்த அவனிடம் கடிதம் வந்திருப்பதாக அவன் அம்மா சொன்னாள். நமக்கு கடிதமா... ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. சன்னலில் இருந்த உறையிடப்பட்ட கடிதத்தை எடுத்தான். அனுப்புநர் முகவரி வெற்றிடமாக இருந்தது. பிரித்துப் பார்த்தான். முத்துகளை கோர்த்ததாக இருந்தன அந்த எழுத்துகள். கடிதத்தை சங்கீதாதான் எழுதியிருந்தாள். வாசிக்க ஆரம்பித்தான்.

பிரியாதிருப்பாய் என்று நம்பி ப்ரியமுடன் உன்னுள் வாழ ஏங்கும் உனக்கான சங்கீதா...

கண்களைச் சிமிட்டிச் சிமிட்டி காதலிக்கும் என் கருவிழிகளை காணாதது போல் கடந்து போகும் உன்னை கட்டியணைத்து முத்தமிட்டு மகிழ்கின்றேன் நாள்தோறும் கனவில். கால்களைச் சுரண்டும் போதெல்

லாம் கட்டெறும்பு கடிப்பதாய் இடம்மாறி அமருகிறாய். உன்னுள் வாழ துடிக்கும் என்னை எவ்விடத்தில் வைத்து அழகுபார்க்க எண்ணுகிறாய் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை.

நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் குழுவில் நீயும் இருக்கிறாய் என்பதை நானறிவேன். நம் மாணவர்கள் மலையக்கோவில் திருவிழாவிற்கு பாதுகாப்பு பணிக்கு செல்வதாக அறிந்து உன்னைக் காண ஒற்றை ரோஜாவை தலையில் சூடாமல் கைகளில் தாங்கி வந்தேன். பூ வைக்காத என் தலையைப் பார்த்து என் தாய் திட்டிக்கொண்டே வந்தாள். உன்னைப் பார்த்த மகிழ்ச்சியில் அந்தப் பூவைச் சூட வேண்டும் என்று நான் எண்ணியிருந்ததை என் தாயிடம் எப்படிச் சொல்வேன்.

உன் நண்பர்கள் எல்லோரும் என்னைப் பார்த்து பேசினார்கள். அவர்களுக்கும் தெரிந் திருக்கும் நான் உன்னைக் காண்ப தற்காகத்தான் வந்தேன் என்று. உனக்கு மட்டும்ஏனோதெரியவில்லை.திருவிழாவில் கூட்ட நெரிசலாக இருந்தபோதும் என்னுள் அவை அனைத்தும் வெற்றிடமாகவே தென்பட்டது.

உன் வருகை இல்லாத திருவிழா வெறிச் சோடி காணப்பட்டது. உன் விடுப்புக்கான காரணத்தை உன் நண்பர்களும் அறியாதவர் களாகவே இருந்தனர். வெற்றுக் கூட்டத்தைப் பார்த்தபடி வெறுமையை சுமந்துகொண்டு அந்த ரோஜாவை படியொன்றின் ஓரமாய் வைத்தேன். சிறுமி ஒருத்தி ஓடி வந்து அதைச் சூடிக்கொண்டு சிரித்தபடி சென்றாள். அந்தச் சிரிப்பில் நாம் மகிழ்ந்திருந்தோம்.

பாட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் இருந்த முகவரியை பத்திரப்படுத்தி வைத்திருந்ததால்தான் என்னால் மடல் எழுத முடிந்தது. பக்கம் பக்கமாய் அமர்ந்தபோதும் பக்குவமில்லாதவனைப் போல் காட்டிக்

# கருப்பு சந்திப்புகள்

## மகேஷ் குமார் சிங்கை

நீ ஊதிய புகையும் பேசிய வார்த்தைகளும்
அந்தக் கோப்பிக்கடையின் மேசைப்பிசுக்கு போல
என் ஆடையில் களிம்பேறிப் போனது.
சவுக்காரத்தின் சவுக்கடிக்கெல்லாம் கழலவில்லை.
வீட்டு அலமாரியிலிருந்த உடைகளிலும் கூட
உன்னிலிருந்து வேகமாய் வெளியேறிய
குருட்டுச் சொற்களின் காலடித்தடங்கள்.
மாற்று உடை வாங்க கடைக்கு சென்றாலோ
அவற்றிலும் நீ வீசிய வார்த்தைகளின் கறை.
மாற்றுடையே கிட்டாவிடில்? என்ற கேள்வியே
பெரும் அருவருப்பைத் தந்தது.
வெறுப்புடன் தெருவில் நிற்கையில்
காலிடையில் ஓடிப்போன நாயைக் கண்ட
அந்தக் கணம் உரைத்தது
மாற்ற வேண்டியது உடையை அல்ல!

# குழந்தைத்தொழிலாளர்

தேநீர் கடையிலும்
தெருவோர நடைபாதைக்கடையிலும்
தேய்ந்துக் கொண்டுதானிருக்கிறது
குழந்தைகளும் குவளைகளும்
குடும்பச்சுமையால்....

வாழ்க்கை சுமையைக்குறைக்க
சலிப்பில்லாமல் சுமக்கிறார்கள்
குழந்தைத்தொழிலாளர் பாத்திரத்தையும்
குழம்பு பாத்திரத்தையும்...

குடும்ப பாரம் நீங்கிட
தேநீர் கடையில்
தினமும்
அலசிக்கொண்டேயிருக்கிறார்கள்
குறிக்கோள்களையும், குடங்களையும்
ஏழ்மை அழுக்கைத் துடைக்க

விரும்பித்தான் விற்கிறார்கள்
வாரச்சந்தையில் காய்கறிக்கூறுகளை
வறுமைக் கூருடைக்க...

பஞ்சத்துக்கு பரிகாரமாய்
பஞ்சர்கடையில் வேலைச் செய்து
வறுமையின் ஓட்டை அடைக்கும் -
இவர்கள்
குழந்தைத் தொழிலாளியாம்

திரைப்படத்தில் நடித்து
நாணயம் பார்த்தால் - அவர்கள்
குழந்தை நட்சத்திரமாம்
என்ன நீதியோ...

தீராத வறுமையைப் போக்கிட
திரையரங்கில் தின்பண்டம் விற்பவனை
திட்டித்தீர்த்தனர்
குழந்தைத் தொழிலாளியென்று

திரையில் ஓடியதோ
பசங்க திரைப்படம்
சிரிப்பில் திளைத்தனர்
குழந்தையின் நடிப்பு
அருமையென்று.....

**பூ.ஆசு, சிங்கப்பூர்**

கொள்ள முயல்கிறாய். உரக்கச் சிரிக்கும் உன் அழகில் உறங்கிக் கிடக்கும் என்னை உன்னுள் அணைத்துக்கொள். கைகளை விட்டபடி சைக்கிள் ஓட்டும் உன் கரங்களை மெல்லப் பற்றிக்கொண்டு மிதக்கும் என்னை உன்னுள் மூழ்கவிடு. சொந்தமாய் பாட்டெழுதி சந்தம் போட்டு சத்தமில்லாமல் உன் நண்பர்களிடத்தில் பாடும் அந்த சந்தடிக்குள் நீந்த துடிக்கும் என்னை ஏந்திக்கொள். விரட்டி விரட்டி உன்னைக் காதலிக்க வைக்கும் அந்தக் கண்களுக்குள் என்னைக் காத்துக்கொள்.

பிரியாதிரு பிரியமே
ப்ரியமுடன்
உன்னுள் வாழும்
சங்கீதாபேரறிவாளன்.

ஒவ்வொருசொற்களிலும்அவள்கலந்திருந்தாள். அந்தக் கடிதம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக கருதினான். அப்படி பாதுகாத்தால் காதலை ஏற்றதாக அல்லவா கருதப்படும். நாளை நேரில் பார்த்து காதலைச் சொல்லிவிடுவதுதான் சரியாக இருக்கும் தனக்குள் எண்ணினான்.

“சாமி.... என்னக்கடிதாசிப்பா அது”

“பழைய கொஸ்டீன் பேப்பர என் ப்ரண்டு அனுப்பிருக்காம்மா...”

“ஏதோப்பா... நா என்ன படிச்சா இருக்கேன். ஓந்தக்கச்சிக ரெண்டும் ஒன்ன நம்பிதான் இருக்குதுக. வித்து கட்டிக் கொடுக்குற அளவுக்கு பெருசா நமக்கிட்ட என்ன இருக்கு. ஓட்டக் கலப்பயும் ஒட்டிப்போன வயிரோட தொத்த மாடு ரெண்டும்காலாநடுகஒருநாத்தங்காலும்தான் இருக்கு. சமத்தா படிச்சுக்குய்யா...”

வழக்கம்போல்பள்ளிக்கூடம்சென்றான். அவன் கடிதம் வந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவளும் அவனைப் பின்தொடர்வதிலிருந்து பின்வாங்குவதாய் இல்லை ...

■



# பிரமிக்கச் செய்யும் ஓர் இலக்கியத் தொழிற்சாலை

# ராஜகவி ராகில்

தமிழ்நெஞ்சம் இதழுக்காக சந்திப்பு :

## பாவேந்தல் பாலமுனை பாறூக்

**இலக்கிய உலகில் கவிதை, சிறு கதை, நாவல், சினிமாப் பாடல்கள், பயணக் கட்டுரைகள் என்பவற்றால் மட்டுமல்லஅறிவிப்புத்துறையிலும்புகழ் பெற்றிருக்கிறீர்கள் இத்துறைக்குள் எப்படி வந்தீர்கள்?**

வானொலி மொழியைக் காற்றில் எழுதும் மின்சார எழுதுகோல் இசைப் பாலூட்டி இதயங்களைக் குழந்தைகளாக்கக் கூடியது. என் இளமைப் போதைக்கு இரசனைக் கள் அறிவு மது பருக்கிய குவளை தான் வானொலி. என் செவிப் புல்லாங்குழல் வழியாக நுழைந்த வானொலி அறிவிப்புகள் என் கை பற்றி எனக்கு எழுதுகோல் எடுத்துத் தந்தது. இளைஞர் இதயம், ஒலி மஞ்சரி, வாலிப வட்டம் நிகழ்ச்சிப் பூக்களில் நானும் கவிதைத் தேன் துளியாகச் சுரந்தேன்.

உயர்தர அமுதம் குடித்து மூளைக்குள் நிரப்பி எழுதுகோல் வழி நான் பரீட்சைக் காகிதக் கோப்பையில் பிழிந்த பின் கொழும்பில் விழுந்து மலர்ந்தேன். இலங்கையில் பழைய சோனகத்

தெரு இக்பால் ஹோட்டல் என்னைக் கணக்குப் பிள்ளையாகத் தத்து எடுத்துக் கொண்டது. என்னைக் கண்டு பிடித்துத் தத்துக் கொடுத்தவர் மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத் அவர்கள். என் கொழும்புப் பொழுதுகள் வண்ணம் பெறத் தொடங்கின. என் கண்களுக்கு வானொலி நிலைய ஒலிக் கண்காட்சி காட்டியவரும் மஜீத் அவர்கள்தான். என் ஓய்வு நாட் கிளையில் வானொலிப் பூங்கிளையில் அமர்ந்து கவிதை கூவுகின்ற ஒரு குயிலாக நான் மாறினேன்.

என் குரல் ஒரு பறவையாக எனது இரண்டாம் அன்னை நிந்தவூர் வரை சிறகு விரித்தது. என் குரல் மலையில் நனைந்த ஊர் கை தட்டல்களால் என் இதயத்தில் மாலை சூட்டி என்னை ஆசீர்வதித்தது.

இரண்டு வருட கொழும்புச் சுவாசம் பல கலை இலக்கிய உயிர்ப்புகளை எனக்குள் நிகழ்த்தின. உயர்தர வைரம் என்னைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டை தீட்டியது.

என்றும் என் இதயத்தில் வாழும் அன்பு நண்பர் உலக அறிவிப்பாளர் பீ. எச். அப்துல் ஹமீட் மலையகக் குளிர் காற்றில் கலைப் பனி தூவுகின்ற ஓர் அறிவிப்பு ஆகாயத்தை என் கண்ணுக்கும் நெஞ்சுக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

அவர்தான் அறிவிப்பாளர் கமல நாதன். பேராதனைப் பல்கலைக்கழகப் பச்சைப் பால் வெளியில் மாணவ விண்மீனாய் மின்னிக் கொண்டு மலை மாநகரம் கண்டி மலையக சேவையில் காவிய மேடை நிகழ்ச்சியில் என் கவிதைக் குரலைப் பதிவு செய்தேன். அப்போது பல்கலைக் கழகத்தில் என் குரல் ஒரு கலையாகப் பிரகடனம் ஆனது. பல்கலைக்கழக மேடைகள் என் குரல் குரல் கேட்டு மகிழ்ந்தன. என் குரல் மது என் தமிழ் அமுது அருந்திய பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் மலைக சேவையில் என்னை ஓர் அறிவிப்பாளனாக்கி மின்மினியாக்கினார். மலையகம் எங்கும் என் பெயர் வாசம் கமகமத்தது. கால விருட்சம் வருட இலைகளை உதிர்த்துக் கொண்டது.

பட்டம்நானும்ஓர்அறிஞன்என்றுஉரத்துச் சொன்னது. பாடசாலை நிலவானேன். வகுப்பறையில் வெண் மல்லிகைகள் மத்தியில் ஆசிரியத் தாமரையானேன். இரண்டு தொழில் கால்களால் நடக்கத் தொடங்கினேன். மாவனல்லை சாஹிராக் கல்லூரிக் கடலில் ஓர் ஆசிரிய அலையாய் எழுந்தும் மலையக வானொலிப் பூவில் அறிவிப்பு வாசம் பரப்பியும் வந்தேன்.

ஒரு விடியலில் கல்லூரிக் கொடியில் வகுப்பறையில் படர்ந்திருந்த எனக்கு ஒரு கை பேசி அழைப்பு ஒலிக் கை நீட்டியது. கொழும்பு வர்த்தக சேவையில் நீ கூவும் குயிலாக வேண்டும். பேசும் கிளியாக வேண்டும் என்றும் உடனே வானொலி நிலையப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் முகநேர்தரிசனம்செய்யென்றும்மறுமுனைக் குரல் மொழிந்தது. அக்குரல் பேராசிரியர் எஸ் தில்லைநாதன் அவர்களுக்குச் சொந்தமானது. எனக்குள் பட்டாம் பூச்சிகள் பறந்தன. மகிழ்ச்சி வெள்ளம் உண்டாக்கி அமிழ்ந்து போனேன் நான்.

வர்த்தக சேவையில் ஒலி வாங்கி முன்னே என் குரலுக்கும் தமிழுக்கும் ஆசனம் கிடைத்தது. தேசம் முழுதும் என் குரல் மக்களின் நேசத்திற்கு உரித்தானது. இன்னும் என் புகழ் ஒளிரத் தொடங்கியது.
ஆசிய சேவை, கொழும்பு சர்வதேச வானொலி, தென்றல் சேவை, பிறை எப் எம் என என் வானொலி வாழ்க்கை முற்றுப் புள்ளி மறந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. வாலிப வட்டம் நிகழ்ச்சிக்கு நான் ஐந்து வருடங்களுக்கு மேலாக தொகுத்து வழங்கிச் செலுத்தும் சாரதியாக இருந்தேன்.

முத்து விதானம், அந்தி நேரச் சிந்துகள், கலையாகஅதிதிகள், ஒலிமஞ்சரி, நேர்காணல் என பலநூறு நிகழ்ச்சி மாலைகள் செய்து நேயர்கள் இதயக் கழுத்தில் சூட்டியுள்ளேன். விளம்பர நிகழ்ச்சிகள் பல்லாயிரம் படைத்து வர்த்தக நிறுவன நிலாக்களுக்கும் நேயர்கள் விளக்குகளுக்கும் ஒளியூட்டி இருக்கிறேன்.



ஈழத்தின் பொன் வாசல் தென் கிழக்கில் நிந்தவூர் நந்தவனம் நான் முதல் மூச்சுப் பெற்ற ஊர். மதீனா மகா வித்தியாலயம் எனக்கு அகரம் சொல்லித் தந்தது. வகுப்பு ஆறிலிருந்து உயர் தரம் வரை எனக்கு அறிவுப் பாலூட்டிய கல்வித் தாய் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை.

பசுமைக்குக் காதல் வந்தால், பூக்களிடம் அழகு எதுவென்று கேட்டால்... நிந்தவூர் என்றுதான் சொல்லும்! கடல் சார்ந்த நெய்தலான வங்கக் கடல் கிழக்கை நீல வண்ணம் பூசி அழகாக்கும். சூரியக் குமரி கிழவியாகும் மேற்குப் பக்கம் வயலோடு கூடிக் களிக்கும் மருதப் பச்சையும் சலசல இசை மீட்டும் ஓடை ஆறு வீணைகளும் நிறைந்த அழகூர் என் இளமைக்கால வயசில் இரசனைத் தீ என் கண்களைக் குளிர்வித்தது.

ஒரு கவிஞன் நடப்பதற்கு ஊரும் ஊர்ச் சூழலும் இரண்டு கால்கள். அவன் இதயத்தை அழகு சுமந்து செல்லும் அருமையான விபத்து எனக்கும் ஏற்பட்டது. என்னைக் கவிஞன் ஆக்கிய பல்கலைக் கழகம் நிந்தவூர்தான்

**உங்களுடைய ஆரம்ப காலப் படைப்பு எது? அதற்குக் கிடைத்த ஆதரவு அல்லது...**

ஒரு மொழியின் நாகரீகம் கவிதைதான். அம்மொழியின் உயிரும் கவிதைதான். உதிர்ந்து போன கால இறகுகள் தாங்கிப் பிடிக்கும் காற்றாய் எனக்குள்ளும் வீசியது கவிதைதான்.

என் முதல் வெளிச்சம் அது. உயிர் உதிர்ந்தால் மரணம். உதிர்ந்த உயிர் எழுந்தால் கவிதை. கவிதையின் முகமோ மனமோ அறியாத வயதில் உள்ளத்து நிலத்தில் வேர் விடுகின்ற ஒரு விதையாகக் கவிதை எனக்குள் முளைத்தது. பல பத்திரிகை மேகங்களில் என் எழுத்துக்கள் நீர்த்துளியாகச் சேர எனக்குள் அவை மழை உண்டாக்கின.

சிந்தாமணி பத்திரிகையில், மணிகவிதை யாக நான் அச்சானேன். தினகரன் சோலையில் நானும் பூப்பூக்கத் தொடங்கினேன். வானொலி வெளிச்சத்தில் ஒலிமஞ்சரி நிகழ்ச்சி வீதியில் நானும் வாகனம் செலுத்தப் பழகினேன்.

வருடக் காலன் வேக நடை போட்டு 2000 மாம் ஆண்டு வீட்டில் குடியேறிய போதுதான் நான் நூல்களானேன்.

நானிட்ட கவிதை முட்டைகளை நூலில் அடைகாத்து குஞ்சு பொரித்தேன். அக் குஞ்சுகளை ஒரு நூல் கூட்டில் வளர்த்து கூட்டுக்கு ‘உன்னிடம் விரல்கள் கேட்கிறேன்’ நாமம் இட்டேன்.

தமிழ் தேச ஆய்வாளர் வல்லிக்கண்ணன் என் கவிதைகளை அணிந்துரை மொழி யால் ஆசீர்வதித்தார்.

தினமுரசு வயலில் என் எழுதுகோல் விதைத்த சிறுகதை நெற்கள். தினகரன் நதியில் நான் பின்னி வீசிய சிறுகதை வலைகள் என எடுத்து இன்னுமொரு சுவாசம் பெயர் சூட்டு விழா நூலுக்கு நடத்தினேன்.

பேராசிரியர் துரைமனோகரன் என் இலக்கியப் படைப்பினை அணிந்துரைக் கல்லில் உரசிப்பார்த்து தங்கமென்று தன் எழுத்து மொழியால் உரத்துச் சொன்னார்.

சிறுகதை மைதானத்தில் நான் இலக்கியப் பந்து விளையாடிய அதே நேரம் கவிதைக் காற்றாடியும் என் வாழ்க்கை வானத்தில் பறக்க விட்டேன்.

இவ்விரண்டு நூல் சாசனங்களையும் தலை நகரில் மருதானை எல்பிஸ்டன் அரங்குச் சுவரில் காலத்தால் அழியாத கல்வெட்டுக்களாக்கினேன்.

''இன்னுமொரு சுவாசம்'' அரச விருதினை அழைத்துத் தந்தது.

''உன்னிடம் விரல்கள் கேட்கிறேன்'' என்னைச் சுட்டிக் காட்டி என் பெயருக்கு வெளிச்சம் உண்டாக்கியது.

''இந் நூல்கள் பனி மூடும்'' குளிர் கூடும் கனடா நாட்டின் நன்னூல் இலக்கிய நிறுவனம் ஒரு நூற்றாண்டின் மிகச் சிறந்த நூல்களென்று சத்தியம் செய்தது.

என் இலக்கியப் பிள்ளைகளுக்கு கூடா விமர்சன எதிரிகள் இல்லை. நான் ஒரு கோப்பைக்குள் குதிரை ஓட்டுபவனும் இல்லை. குழு சாக்கடைக்குள் விழுந்து துர்நாற்றம் வீசுபவனும் இல்லை. யார் மனசுக்கும் இலக்கிய ஈட்டி எறிந்து காயம் நிகழ்த்துபவனும் அல்லன்.



இலக்கியம் பூக்கூடை. நான் நறுமணம் பரப்புபவன்.ஓர்இலக்கியப்படைப்புமூளைக்கு வலி கொடுக்கக் கூடாது. சிந்தனைக்குக் கல்லெறிந்து காயம் உண்டாக்கக் கூடாது. எழுத்தும் பொருளும் சிலந்தி நூல் போல மென்மையாக இருக்க வேண்டுமென்று என் விருப்பத்திற்கு நான் கட்டளை பிறப்பித்தவன்.

முள் மலர் பிரசவிக்காது. முள் நறுமணம் தராது. பாரதி கூற்றினை அடிகோடிட்டு ஆராதிப்பவன் நான். இக்காரணங்கள் என்னை நோக்கி நீளுக்கின்ற பிரம்பினை பறித்து வீசி விடுகிறது

**உங்கள் குடும்பம், இலக்கிய வாழ்வுக்கு குடும்பம் தந்த ஒத்துழைப்பு...**

எனக்குத் தமிழ்ப்பாலும், புனிதப் பாலும் ஊட்டியவர் உம்மி அன்னை பேச்சு மொழியைக் குரலால் சுவாசிப்பவர் வாப்பா சின்னக் குவளையில் கல்விப் பால் குடித்தவர். இலக்கியச் சோலைப் பக்கம் மழைக்கும் ஒதுங்காதவர்கள்.

நான் நாலைந்து நூல்களுக்கு வெளியீட்டு உயிர் கொடுத்த போது ஏதோ ஒரு நல்ல காரியம் மகன் செய்கிறான் என்று மனதுக்கு வெள்ளையடித்தவர்கள் என் துணைவி கரீமா கல்வி ஒளியால் பிரகாசிப்பவர். என் இலக்கியப் படைப்புக்களை நேசிப்பவர். என் எழுத்து மின்மினிகளை நட்சத்திரமாக்கியவர். என் எழுத்துச் சூழலுக்கு இருள் பாய்ச்சாதவர். என் உயிரின் துடிப்பு ஹனீக்கா ராகில் கற்றல் கடலில் கப்பல் விட்டு என்னையும் மாலுமியாக்கி மகிழ்விப்பவர், ஆங்கில இலக்கியங்களின் படைப்பாளி. தமிழ்த் திரைப்பட பின் திரையில் தன் குரல் அழகி. என் இலக்கியங்களின் நாடி பிடித்துப் பார்ப்பவர். என்னைத் தேடித்தேடி படிப்பவர். என் கவிதைச் சேலைக்கு ஆங்கில வண்ணம் பூசி சர்வதேசம் ஆக்குபவர். இலக்கியத்தின் சக்கரம் குடும்பம் தான். அச்சக்கரம் உருண்டால் தான் இலக்கு நோக்கிய பயணம் இலகு பெறும்.

நான் இலக்கியப் பால் காய்ச்சுபவன் என்

வீட்டுப்பூனைகள்தான் முதலில் குடிக்கிறார்கள். சுவை பற்றியும் போசாக்குப் பற்றியும் என் பூனைகள்தான் மியாவ் என்கிறார்கள்.

வெளிவந்த நூல்கள். அவற்றை வெளியிடும் போது ஏற்பட்ட வலிகள் அல்லது சுகங்கள். நூல்கள் வெளியிடப்பட்ட பின் ஏற்பட்ட மன நிறைவு...

இதுவரை 18 நூல் ஆடுகள் என்னை மேய்ந்துள்ளன. ஒவ்வொரு நூலும் என்னைக் காட்டுகின்ற கண்ணாடிகள்.

இன்னுமொரு சுவாசம் - சிறுகதை நூல். அரச விருதினை உடமையாக்கியது.

உன்னிடம் விரல்கள் கேட்கிறேன் - கவிதை நூல்

என் உயிரும் உன் முகவரியும் - தொடர் கவிதை நூல்

உன் கண்ணால் தொடுகிறேன் - கவிதை நூல். இவை தமிழ்நாடு மணிமேகலைப் பிரசுர வெளியீடுகள்

சின்னச் சித்திரங்களில் சூரியன் - ஹைக்கூ கவிதைகள்.

நீ கேட்ட கவிதைகள் - வானொலிக் கவிதைகள்

மன வனத்தில் நந்தவனம் - தொகுப்புக் கவிதைகள்

அன்புடன் பூங்காற்றுக்கு - வானொலியில் நான் தொகுத்து வழங்கி ஒலிமஞ்சரி நிகழ்ச்சியில் இடம் பெற்றவை.

பள்ளத்தாக்கில் சிகரம் - கவிதை நூல்

மொழி ஒளி - தமிழ் மொழி பற்றிய தொடர் கவிதை.

சட்டைப் பைக்குள் சிறகுகள் - கவிதை நூல்




# கோடை மழைக் கொண்டாட்டம்.

உச்சி வெயிலில் வாடிய
பழுத்த இலைகள் ஒன்றிரண்டு
விடைபெறும் வேளையிலே
பூத்துக் குலுங்குகின்றன
நாளைய மரணம் அறியாத
மொட்டுகளும் மலர்களும்.

வெண் பஞ்சு மேகங்களும்
அழகோவியம் காட்டிக் கலைந்திட
பூவின் மேல் வந்தமர்ந்த
வண்டொன்று
ரீங்காரமிடத் தொடங்குகிறது.

இசைக்கு மயங்கிய ஆழ் மனம்
இறக்கை விரிக்கும் வேளையில்
மெல்லிய குளிர் காற்றொன்று
என் தேகம் தழுவிச் செல்கிறது.

இருட்டிடாத வானம் என் மேல்
சாரல் மழை பொழிந்து செல்ல
கோடை மழையில் நான் நனைந்து
குதூகலித்துக் கொண்டாடிய பின்
சட்டென்று தோன்றிய வானவில்
வர்ணயாலங்கள் காட்டி மறைகிறது.

**கவிஞர் - ரசி குணா**
மட்டு நகர், இலங்கை

உடைந்த மழையில் நனைந்த பட்டாம் பூச்சி - உரை கவிதைத் தொடர். இவை ஆர்கே மீடியா வெளியீடுகள்

சிலந்தி பின்னிய பட்டு வலையில் சிக்கிய விண்மீன்கள் - கவிதை நூல் - சேலம் இனிய நந்தவனம் வெளியீடு.

யாழ் மீட்டிய கண்கள் - பயண அனுபவக் கட்டுரை நூல்.

மிட்டாய்மலைஇழுத்துச் செல்லும்எறும்பு-நாவல்

தேவதையின் அந்தப் புரத்தில் பட்டாம் பூச்சிக் குடியிருப்பு - வண்ண நூல்-கவிதைகள். இவை சென்னை அகநாழிகை பதிப்பக வெளியீடு.




ஓவியனை வாசித்த புல்லாங்குழலில் வர்ண இசை – கவிதைகள் தமிழ்நாடு பாரதி இலக்கிய விருது பெற்ற நூல்.

நீ பலூன் கண்களால் ஊதுகிறேன் நான் - கவிதைக் கதைகள் அல்லது கதைக் கவிதைகள். இவை மதுரை ஓவியா பதிப்பக வெளியீடுகள்.

''தூக்கணாங் குருவிக் கூடு கட்டுதல் இலகு''

''ஒரு நூல் பூத்தல் என்பது வேர் நிகழ்த்தும் போர்தான்''

''தனி மனித உழைப்பு ஒரு தோப்பாகுதல் சிரமம்''

''கைகள் இணைகின்ற போது ஓசை பலம் பெறுகிறது''

இப்படித்தான் நூல் வெளியீடும்

நான் நூல் யாத்த காலமெல்லாம் எனக்கு நூறு நூறு விரல்கள் கிடைத்தன. என்னைச் சூழ இருந்த தாரகைகள் எல்லாம் உடல் உழைப்பும் மனப் பலமும் கொண்டு எனக்கு ஏணியாக இருந்தார்கள். வலி வென்று வலி கடந்து நூல் என் வெளியீடுகள் இனித்தன.

என் முதல் இரு நூல்களும் கண்ட சன நெரிசலில் கொழும்பு எல்பின்ஸ்டன் அரங்கு மூச்சுத் திணறியது.

தினகரன் வார மஞ்சரி இந்திர லோகத்தில் இரு நூல்கள் வெளியீட்டு விழா என்று அச்சு செய்தன.

கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி தேசிய கல்லூரியில் கண்களால் உன்னைத் தொடுகிறேன் நூல் மூச்சு விட்ட போது நான் விமானம் ஓட்டிப் பறந்தேன்.

''என் உயிரும் உன் முகவரியும்'' கொழும்பு சுகதாச ஹோட்டலில் மலர்ந்த போது பல்துறைப் பிரபலங்களும் எனக்கு நட்சத்திரத் தகுதி வழங்கினார்கள். கண்டி இந்து மாமன்றத்தில் என் மொழி ஒளி பேராசிரிய நிலாக்களால் வெளியீட்டுப் பிரகாசம் அடைந்தபோது என்னைத் தமிழ் உலகம் நிமிர்ந்து பார்த்தது.

அகர நாடு சென்னை எனும் மகா மனித சமுத்திரத்தில் என் நூல்கள் வெளியீட்டு மீன்களாக நீந்திய போது நூல்கள் மெரினாக் கடற்கரை வரை என் பெயர் உச்சரிக்கப்பட்டது.

தென் கிழக்குப் பொன் நிலம் நிந்தவூர் என் நூல்களுக்கு வெளியீட்டு விருந்து வைத்த போது ஊரும் தேசமும் என்னைப் புல்லாங்குழலாக வாசித்தன.

நூல் வெளியீடுகள் என்னை ஆண் அன்னை

யாக்கின. என் சிப்பியில் விளைந்த நூல் முத்துக்கள் வாசகர் கைகளிலும் இல்லங்களிலும் வாசிப்பு ஒளி சிந்தின.

இலங்கை அரசு பல இலட்சங்களுக்கு என் பிள்ளைகளைப் பிடித்து நூலகங்களில் ஒப்படைத்தன.

தமிழ் பணக்கார மொழியென்று நான் நம்பினேன். சர்வதேசமெங்கும் இருந்து பல இலட்சங்களுக்கு எனது நூல் பூக்கள் வாங்கி சூடிக் கொண்டார்கள்.

என் இலக்கியங்கள் பொன் முட்டையிடும் வாத்து என்று என் நம்பிக்கைச் சேவல் கூவியது. எனது நூல்களை நானே இரவல் அல்லது விலைகொடுத்து வாங்கும் அதிஸ்டம் நிலவுகிறது.

நழுவி விழுந்த பக்கத்து நாளொன்றில் நான் வெளியிட்ட "நீ பலூன் கண்களால் ஊதுகிறேன் நான்" விற்றுத் தீர்ந்து போயிற்று. போட்டிப் பாட்டி வீட்டுக்கு அனுப்பக்கூட இல்லாமல் எல்லாவற்றையும் ஊதிவிட்டேன்.

என் நூல்கள் வாசகர் ஆய்வாளர் நாவுகளில் ஏறி என்னை வாழ்த்தும் போது தரையில் கிடந்த என் மீனை எடுத்து ஆற்றில் விடுகிறார்கள்.

நான் நூல்கள் பூக்கும் சோலை யாதலால், நான் கவிதை ஒலிப் பேழை ஆக்கும் மின்சாரமாதலால், என் ஆர் கே மீடியாவால் நான் விருது விருந்து கொடுக்கும் உணவாதலால், நாற்பதுக்கும் மேலான விழா மழைத்துளிகள் பொழிந்தவன். அனுபவச் சுவட்டில் நடக்கிறேன் வழி தவறச் சந்தர்ப்பம் இல்லை. அன்பு வீதியில் பயணிக்கிறேன் திசை மாற வழியில்லை. ஆத்மீக நெறியில் வசிக்கிறேன் பாவங்களுக்கு உயிரில்லை. கலை இலக்கியம் வாழ்வாதல் மகிழ்ச்சிக்கு ஆழ வேர் கொடுக்கிறது. நூல்கள் சிறகுகள் எனக்குத் தெரியாமலேயே நான் பறந்து கொண்டிருக்கிறேன்.



# ஹைக்கூ

■

பாவ மன்னிப்பு
யாரிடம் கேட்பதோ
மூடர்களே..!

■

போருக்குப் பின்
மீண்டும் தொற்றுகிறது
பதற்றம்...

■

கூட்டுப் பிரார்த்தனை
இன்னும் உயிர்த்தெழவில்லை
மனித நேயம்

■

இராவண தேசம்
பற்றி எரிகின்றது
மத வெறி

■

பிரித்தாளும் கொள்கை
வேரூன்றி நிற்கும்
பௌத்த தேசம்

■

வெடித்த தேவாலயம்
தொங்கிய படி இருக்கின்றது
கர்த்தரே இரட்சிப்பாய்

**- தமிழ் தம்பி**



**அசுர வேக எழுத்தாளனாக இருக்கிறீர்கள். முக நூலிலும் வேறு ஊடகங்களிலும் அவை தொடர்ந்து வெளிவருக்கின்றன. நீங்கள் ஒரு முழு நேர எழுத்தாளர் இது எப்படி சாத்தியமாகிறது?**

பூமி சுற்றுதல் எப்படி இயல்பானதோ மாரியில் மழை பொழிதல் எப்படி உண்மை யானதோ அப்படித்தான் என் பொழிதலும் சுழல்தலும்.

நான்ஒலிஒளிபோலவேகமானவன்.ஒரு புள்ளி கிடைத்தால் ஒரு கடல் உண்டாக்கி நான் அலையாய் எழுவேன். ஒரு விதை தந்தால் ஆயிரம் பரப்பு வயல் செய்வேன். வேகமும் விவேகமும் அறிவு சார்ந்து இணைகின்ற போது ஆக்கம் அவசரமாய் நடை பெறுகிறது. இடை விடாமல் ஆமை நகருமானால் சோம்பல் கொண்ட முயலுக்கு ஆமை வேகம் அசுரமாகத் தெரியும். என் ஓய்வு நேரத்தை யும் நான் தமிழுக்குச் சேர்த்தனமாகக் கொடுத்தவன் இதனால் தமிழ் அன்னையின் அன்பைப் பெற்றேன்.

தாகம் இருப்பவன் நீர் தேடி ஒய்யாரமாக நடக்க மாட்டான். எவ்வளவுக்குத் தாகம் இயக்குகிறதோ அவ்வளவுக்கு வேகமாக இயங்குவான். இது வாழ்வியலில் எல்லா அம்சங்களுக்கும் எரிபொருள்.

தமிழ் சிலருக்குப் பிழைப்பு. இன்னும் சிலருக்குப் புகழ். இன்னும் சிலருக்கு உயிர் மூச்சு. எனக்குத் தமிழ் வாழ்க்கை. வாழ்க்கை அழகினை எவ்வளவுக்கு நேசிக்கிறோமோ... அவ்வளவுக்கு உயிர் உடலுக்குப் பாதுகாப்பு வேலி போடுவோம்.

எனக்குத் தமிழ் வாழ்க்கை என்பதால் தமிழை என்னைப் போல நேசிக்கிறேன். அதனால் தமிழ் அன்னை என்னை அதிகம் நேசிக்கிறாள் என்றுதான் என் உள் மனம் மணியடிக்கிறது.

நான் ஒரு இலக்கியத் தொழிலாளி. நான் உழைக்க உழைக்க என் எழுத்துக் களுக்குத்தான் வியர்க்கிறது.

என் பாடசாலை என் விரல்களை வளைத்துத்தமிழாக்கியது.என்கல்லூரிதமிழை என் உயிர்ச் சட்டைப் பைக்குள் வைத்தது. என் பல்கலைக் கழக வானம் எனக்குத் தமிழ்ச் சிறகு தந்தது. நான் தமிழ் அன்னையை வகுப்பறை அறிமுகப்படுத்துகின்ற ஆசான். அறியாமை இருளை தமிழ் ஒளி வாட் கொண்டு அறுத்து எறிபவன். தமிழ் நிமிர்ந்து நின்ற இலங்கை வானொலிப் பூமரத்தில் குயிலாகக் கூவுகிறவன். அறிவிப்பு கலை கொண்டு தமிழுக்கு விளக்கேற்றி வைப்பவன். தொழில்களால் தமிழன். பேச்சால் தமிழன். எழுத்தால் தமிழன்.

வாழ்க்கையைத் தமிழ் நேசிக்கும் போது, தமிழில்தான் வாழ்க்கைச் செடி பூக்கும். தூக்கச் சிறைக்குள் நுழையும் வரைக்கும் தமிழ் என்னை விட்டு உறங்குவதில்லை.

தமிழ் என்னை முழு நேரமாக்கி இருக்கிறது. தொழில் தவிர்த்து எழுத்து என்னை முழுமையாகச் சூழ்ந்து இருக்கிறது. அதனால் என் ஆகாயம் முழுவதும் இலக்கியக் கார் முகில் கருக் கொண்டபடியே இருக்கும். தேவையான நேரம் நான் மழையாகிறேன்.

கைக்குட்டைநேரம்என்நாளில்கிடைக்கும் போது அந்நேரத்தை இலக்கியமாக்கும் வல்லமை இறைவன் எனக்குத் தந்த வரம்.

கவிதை யோசித்து எழுதுவதல்ல. அது ஒரு மின்னலைப் போல தோன்றுவது. தோன்றும் போது பிடித்துக் கொள்ள வேண்டும். எனக்கு நேரம் காலமின்றி தோன்றிக் கொண்டே

இருக்கிறாள் கவிதைக் கன்னி.

கவிதை இதயத்தால் எழுதுவது. அதை மூளையோடு சம்பந்தப்படுத்தும் போதுதான் சிக்கலடைகிறது.

கவிதை இலக்கியச் சாகரத்தில் எல்லா ஆழத்திலும் நான் முத்தெடுத்தவன் மணிக் கவிதையில் காதல் தொடங்கி, மரபுப் பூப்பறித்தேன். புதுக்கவிதைக் குளத்தில் ஆம்பலானேன். வசன கவிதைத் தெருவில் வாகனம் செலுத்தினேன். ஹைக்கூ வானத் தில் காற்றாடி விட்டேன். நவீன நதியில் வலை வீசினேன்.

1500 நவீன குறள்கள் யாத்து, ஓர் அதிகாரம் 15 குறள் என 100 அதிகாரத் தங்கத்தமிழ் மகளுக்குச் சூடியுள்ளேன். என் எழுத்து விதைகள் வாசகர் வயலில் முழு நேரமும் விதைக்கப்படுகிறது.

நான் குன்றும் குழியுமான மனிதன். என்னை நிரப்பிக் கொண்டிருக்கிறது தமிழ்.

**முழு நேர எழுத்து அல்லது அசுர எழுத்து படைப்பின் தரத்தில் குறைபாடுகளை ஏற்படுத்தும் என்ற கூற்று பற்றிய உங்கள் கருத்து?**

வெற்றிவாகை சூடிய பிரபல விருட்சங்கள் அசுர வேக மிக்க கலை இலக்கியக் குதிரைகள்தான். இது பல்துறை சார்ந்தவர்க்கும் போட்டுப் பார்க்க வேண்டிய சட்டைதான்.

கம்பன் முழு நேரம் அசுர வேகம். கம்ப ராமாயணம் போலுண்டோ பேரிலக்கியம்? எமக்குத் தொழில் கவிதை என்றானே கவி ராசன் பாரதி. அவன் படைப்பில் குறை உண்டோ?

எனக்குத் தேவை வெற்றி என்றான். அவன் முழு நேரம் அசுர வேக மிக்க மா வீரன் அலெக்ஸ்சாண்டர். அவன் தோல்வி கண்டானா?

அசுர வேகம்... முழு நேரம் உழைப்புத் தான் இன்றைய நவீன விஞ்ஞானம் ஒரு கை இல்லாதவன். சோம்பல் இயலாமை வார்த்தைகள் மீது என் நம்பிக்கை ஆசனம் போட்டு அமராது.

1000 திரைப் படங்கள் தாண்டிய இசைக் கிழவர் இளைய ராஜா இசையில் குறை உண்டோ?

எழுத்துச் சித்தர் ஜெயகாந்தன் எழுத்து வலை வீசி நாவல் மீன் பிடித்தவர். அவர் அசுர வேக எழுத்தில் குறை கண்டோர் யார்?

சுஜாதா போல் எழுத்து வேந்தர் இல்லை.தொடர்ந்து வளரும் பிறைதான் பூரணத்துவம் பெறுகிறது. தொடர்ந்து விழும் மழைதான் நீர்ப் பஞ்சம் போக்குகிறது.

என் இலக்கியப் படைப்புக்களை நூல் வங்கியில் வைப்பிலிட்டால் 500 நூல்கள் வரை வரவு வைக்கப்படும்.

காற்று வீசிக் கொண்டே இருக்கும். அது நின்றால் உயிர்களுக்கு வாழ்க்கை கிடையாது. அது போலத்தான் எழுத்தும். மூச்சுப் பழம் விழும் வரை இலக்கியம் வாழ்க்கை மரத்தை அசைத்துக் கொண்டே இருக்கும். இது ஒரு வகையான போதை.



எழுத்து அபின். நான் எழுதுகோலோடு கோபித்துக் கொண்டால் வலிய வந்து என் விரலிடுக்கில் குந்தி என்னோடு பேசும்.

நிறைய எழுதினாலும் நிறைவு என்னை நேசிக்க மறுக்கிறது. பலப்பல இலக்கியப் பரிசோதனை முயற்சி வண்ணம் மொழிக்குப் பூசி இருக்கிறேன். புதியவைகள் யாத்தல் வேண்டுமென்ற ஓர் அவா. ஒரு பெருங் காதல் என்னுள் ஆல மரமாய் எழுந்து விழுதுகள் விடுகின்றன. எழுத்தும் இலக்கியமும் என் இரு கண்களாகி விட்டன. விழித்துப் பார்க்கத்தான் வேண்டும். இதை இமைகளற்ற கண்கள். மூடுதல் சாத்தியம் இல்லை. தேனை ஊற்ற ஊற்ற கோப்பையே தேனைக் குடிக்குமானால் ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டுமல்லவா?

நான் தேன் கொடுக்கின்ற பூ வண்டு. முற்றுப் புள்ளி நோக்கி விரையாத கமா தான் நான்.

பேராசை பிடித்த என் எழுத்துக்களுக்கு நிறைவு என்பது கரை இல்லாத கடலின் நிலைமைதான்.

**உங்கள்பாடல்முயற்சி...பாடல்கள்வெளி வந்த திரைப் படங்கள்... களம் தந்தவர்கள்... தந்து கொண்டிருப்பவர்கள்...?**

நான் உயர்தர வகுப்பறையில் வாழ்ந்த போதே வானொலிக் குருவியிடம் என் பாடல்களைச் சொல்லி அனுப்புவேன். இப்பொழுதும் என் நெஞ்சில் அச்சிலிர்ப்பு ஊற்று வற்றாமல் இருக்கிறது.

இசைக் கோலம் நிகழ்ச்சியில் குரல் வண்ணம் பூசுவார் அப்துல் ஹமீட். மோகன் ரங்கன் புதுப் புது இசை தந்த பிரபல காலம் அது. பாடல் எழுதும் போட்டியில் தலை குனிந்த என் எழுதுகோல் 3000 பாடல்களில் என் பாடல் மட்டும் தேர்வாகி மோகன் இசை ஊட்டி அழகு சேர்த்து அவர் குரல் ஓடையில் வழிந்த அப்பாடல் இன்னும் என்னுள் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த மகிழ்ச்சி விடியலில் இருந்து என் பாடல் பயணம் ஆரம்பமாகியது.

தொலைக் காட்சி, வானொலி என என் வரிகள் பாடல் ஆடை அணிந்து இதயங்களுக்கு அழகு காட்டின. சந்தன மேடை, மெல்லிசைப் பாடல்கள் நிகழ்ச்சி நிலத்தில் என் வரிகள் பாடல்களாய் முளைத்துப் பூத்தன.

என் எழுதுகோற் பசு ஈன்ற பாடல் குட்டிகளை குரலால் இசையால் வளர்த்தவர்கள் பலர். விமுத்தழகு, கலாவதி சின்னச் சாமி, கே ரகுநாதன், அக்னி சிவக்குமார், மோகன், கணேஷ்வரன் போன்ற இன்னும் பல கலைஞர்கள்.

கனவுப் பூங்கா... திரை வானம் சினிமா என்பது இலகுவில் எட்டிப் பறித்து விட முடியாத கனி. அக்கனியை என் எழுதுகோல் பறித்தது.

இயக்குனர், தயாரிப்பாளர், வசன கர்த்தா ஏ ஆர் கே ராஜராஜா முதன் முதல் எனது சினிமா வாசலைத் திறந்து வைத்தார். மீண்டும் அம்மன் திரைப்படத்திற்கு முதன் முதல் என் எழுதுகோல் பாடல் வரிகள் படைத்தது. திரைப்படம் வெற்றி மலை ஏறி வசூல் கொடி நாட்டியது.

நடிகை, இயக்குநர் ராதிகா இயக்கிய கூட்ஸ் வண்டியிலே திரைப்படத்திற்கு என் வரிகளைக் காணிக்கை ஆக்கினேன். என் வரிகளுக்கு என் குருதி என் மகள் குரல் கொடுத்து செவிகள் மயக்கினார். பாடல் வெற்றி ஏணியில் ஏறியது.

ரசி பிலிம் மீடியா தயாரித்த யாவும் காதலே, கொலம்பஸ் ஆட் தயாரித்த சாஹிரா, சுப தமிழ் வாணன் இயக்கிய போலீஸ் தேடுது, ஆனைவாரி ஸ்ரீதர் இயக்கிய கோமுகி, பொள்ளாச்சி சசி இயக்கிய சந்திரிகா போன்ற திரைப் படங்களுக்கு என் பாடல் வரிகள் இன்னும் வண்ணமும் வனப்பும் உண்டாக்கின.

ஏ ஆர் கே ராஜ. ராஜா இயக்கிய பொய்யாட்டம், ஆனைவாரி ஸ்ரீதர்

இயக்கிய கங்கணம் போன்ற திரை உயிர் ஓவியங்கள் என் வரிகளால் திரைக்கு வர்ணம் ஊட்ட உள்ளன.

எனது இரண்டாம் அன்னை நிந்தவூர் சிறப்புகள் பற்றி நிந்தவூர் மான்மியம் என்று பெயர் கூறி பாடல் எழுதி நானே இயக்கி நடித்து வெளியாக்கினேன்.

சர்வதேசப் புகழ் ஒளி நிறைந்த நிலாமுற்றாம் குழுமம் உலகம் தழுவி நடாத்திய பாடல் படைக்கும் 10 போட்டிகளிலும் முதலாம் நிலை அடைந்து டொப் டென் கோல்டு கோப்பை வென்றேன்.

காதற் பாடல்கள், தனிப் பாடல்கள், விடுதலைப் பாடல்கள், ஆத்மீகப் பாடல்கள், தமிழ் மொழிச் சிறப்புப் பாடல்கள்.

சினிமாப் பாடல் என 500 பாடல்கள் இயற்றி உள்ளேன்.

100 கும் மேற்பட்ட பாடல்களுக்கு நானே மெட்டுப் பட்டு உடுத்தி நானே குரல் அழகும் காட்டியிருக்கிறேன்.

என் கலை இலக்கியப் பணிகளுக்கு இறைவன் தந்த வரமே காரணமாகும்.

**பலதுறைகளின் பரிணாமத்தால் செய்த பணிகள், கிடைத்த சிறப்புகள் பற்றியும் கொஞ்சம்...**

நான் எழுதிய கவிதைத் தொடர்கள் :

- செல்லம்மா என் அழகு தேவதை
- இப்படிக்கு அம்மா
- மொழி ஒளி
- விரலிடுப்பில் தளம்பும் மைக் குடம்
- நான் காதலிக்கும் சீசெல்சு
- இறை காதல்
- சல்மா
- கஸல்

முதலில் பட்டதாரி ஆசிரியர்.

இலங்கை வானொலியில் 20 வருடங்கள் சிரேஸ்ட அறிவிப்பாராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும்கடமைபுரிந்துள்ளேன். பிறை எப் எம் வானொலியில் சிரேஸ்ட அறிவிப்பாளராகக் கடமை புரிந்து வருகிறேன்.

கலை இலக்கிய நிகழ்ச்சிகள் பல தொகுத்து வழங்கியுள்ளேன். (வாலிப வட்டம், ஒலிமஞ்சரி, காவிய மேடை, கலையக அதிதி , முத்து விதானம் போன்ற நிகழ்ச்சிகள்)

பல நூறு கலை இலக்கிய சினிமா நட்சத் திரங்களை நேர்காணல் செய்துள்ளேன்.

மெல்லிசைப் பாடல்கள் நூற்றுக்கும் மேல் இயற்றியுள்ளேன்.

வானொலி நாடகங்கள் பல எழுதியும் நடித்தும் இருக்கிறேன்.

மூன்று திரைப்படங்களுக்கு கதை, திரைக் கதை, வசனம், பாடல்கள் என கையெழுத்துப் பிரதிகள் எழுதியுள்ளேன். இவை இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பாதுகாப் பாக உள்ளன .

செந்தூரம் வார இதழில் ‘கற்பனைத் தீயின் கற்கண்டுத் தகிப்பில்’ புதிய நடை கொண்ட இலக்கியப் படைப்பினையும், இதயத்தில் வடிகின்ற தேன்’ எனும் படைப்பினையும் ஐந்து வருடங்கள் தொடராக எழுதியுள்ளேன்.

இப்பொழுது சென்னையில் தயாரிக்கப் படுகின்ற பல திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதிவருகிறேன்.

கிடைத்துள்ள விருதுகள் :

கவிவாணன் - 1988
தமிழ் மணி - 1990
இலக்கிய ஜோதி- 1997
சாமசிறீ - 2000
ரத்தின தீபம் - 2003
சந்தப்பா வேந்தர் - 2004
ராஜகவி - 2005

தமிழ் நயாகரா - 2013
கவித் தாமரை - 2017
தமிழருவி - 2018
பல்துறை வேந்தர் - 2019
விருதுகளின் சக்கரவர்த்தி - 2019

என்னை நேர்காணல் செய்த அச்சு ஊடகங்கள் :

தினகரன் வாரமஞ்சரி, தினகரன், மித்திரன் (வாரமஞ்சரி) இருமுறை, செந்தூரம், சிரித்திரன், தினக்குரல், வண்ணத்திரைவார (சினிமா இதழ்) சென்னை, இனிய நந்தவனம் (மாத இதழ்) சேலம், வீரகேசரி (வாரமஞ்சரி), உதயன் பத்திரிகை – யாழ்ப்பாணம், உதயன் பத்திரிகை – கனடா, தமிழ்நெஞ்சம் – பிரான்ஸ்.

நேர்காணல் செய்த இலத்திரனியல் ஊடகங்கள் :

இலங்கை வானொலி தென்றல் சேவை, இலங்கைத் தொலைக்காட்சி - நேத்ரா (பலமுறை), லண்டன் தமிழ் வானொலி - இரு நாள் தொடர் நிகழ்ச்சியாய்..., பல இணைய வானொலிகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப் எம் (பலமுறை), ஐ ரி என் தொலைக்காட்சி, வசந்தம் தொலைக் காட்சி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மலையக சேவை.

கடமை புரிந்த வானொலிகள் :

வர்த்தக சேவை, தென்றல் சேவை, கொழும்பு சர்வதேச வானொலி, ஆசிய சேவை, மலையக சேவை, பிறை எப் எம்.

பலநூறு வானொலி விளம்பர நிகழ்ச்சிகள் செய்துள்ளேன்;பலகவியரங்கநிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கியிருக்கிறேன்; (நேத்ரா தொலைக்காட்சி, பிறை எப் எம் வானொலி, மேடைக் கவியரங்கங்கள்).

தோழன் கலை இலக்கிய இதழ் ஆசிரியர் :

முதன் முதலாய் அறிவிப்பாளர் பி எச் அப்துல் ஹமீத் எனது தோழன் இதழுக்கு நேர்காணல் தந்தார்.

அல் இன்சிராஹ் - பேராதனைப் பல்கலைக் கழக இதழின் பிரதான ஆசிரியராகப் பணியாற்றி இருக்கிறேன்.

இடி - வார இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி இருக்கிறேன்.

நிந்தவூர் ஆர்கே மீடியா பணிப்பாளராக இருந்து கொண்டு கலை இலக்கிய வாதிகள் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு விருதுகளும், பட்டங்களும், பதக்கங்களும், பொன்னாடையும்,நினைவுச்சின்னங்களும் வழங்கிக் கௌரவித்திருக்கிறேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயக அமைச்சரின் ஊடக செயலாளராகப் பல வருடங்கள் பணி புரிந்துள்ளேன். மக்கள் பெருந்தோட்ட பிரதி அமைச்சர் எஸ். நிஜாமுதீன் அவர்களின் தனிப்பட்ட ஆலோசனையாளராகவும், ஊடகப் பணிப் பாளராகவும் பணிபுரிந்திருக் கிறேன்.

சர்வதேச ரீதியாக நடைபெறும் கலை இலக்கியப் போட்டிகளுக்குச் சிறப்பு நடுவராகவும் கடமையாற்றி வருகிறேன்.

சர்வதேசக் கீர்த்தி நிறைந்த தமிழ்நெஞ்சம் என் இயங்குதலை நேர்காணல் காமரா மூலம் படம் பிடித்து என்னையும் கௌரவப்படுத்தியதற்கு நன்றிப் பொன்னாடை போர்த்தி மகிழ்கிறது எனது இலக்கியத் தமிழ். என் மனம் நோக்கி எய்த கேள்வி அம்புகளால் நான் உயிர்த்தேன்.

என்னை உயிர்க்க வைத்த பாவேந்தல் தென்கிழக்கு கவிச்சிங்கம் பாலமுனை பாரூக் அவர்களுக்கு என் இதயம் நன்றி சொல்லிச் சமர்ப்பணம் செய்கிறது.

நூல்கள் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். editor@tamilnenjam.com

# பிச்சைக்காரி

**மலர்மதி**

பஸ் நிலையத்தில் நின்றிருந்தாள் அந்த பிச்சைக்காரி.

எண்ணெய்க் கண்டிராத தலை முடி, ஆங்காங்கே தையல் போட்ட கிழிந்த சேலை. என்றாலும் பார்ப்பதற்கு செழுமை யாகத்தான் இருந்தாள்.

சற்று தூரத்தில் நண்பன் சந்துருவோடு வந்துக்கொண்டிருந்த ராஜ், “அதோ பாரு பாஸ்... அந்தப் பிச்சைக்காரி அழகா இல்லை?” என்றான்.

“அடப் பாவி.. பிச்சைக்காரியைக்கூட விடமாட்டியா?” என அதிர்ந்தான் சந்துரு.

“அழகு எங்கிருந்தாலும் அனுபவிக்கணும் பாஸ்.” என கண்ணடித்தான் ராஜ்.

அவளை நெருங்கியவன், மெல்ல விசில டித்துக்கொண்டே, “சூப்பர் ஃபிகர். வாவ்..” என்று அவள் காதுபடவே சொன்னான், அவள் அவனை கோபத்துடன் முறைப்பதைக்கூட பொருட்படுத்தாமல்.

ஒரு வாரம் கழித்து ராஜ் பெண் பார்க்கப் போனான்.

நல்ல வசதியான இடம். பெண்ணும் பார்ப்பதற்கு லட்சணமாய், அழகாய் இருக்க, “ஓ.கே.” சொன்னான் ராஜ்.

“பொண்ணு கொஞ்சம் பையனோடு பேசணுமாம்.” என்று பெண்ணின் அப்பா சொல்ல, ராஜ் தனி அறைக்குள் நுழைந்தான்.

“உங்களை எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கலை.” என்றாள் அவள்.

“ஏன்..ஏன்..?” – அதிர்ந்தான்.

“எனக்குக் கணவரா வருபவர் நல்ல நேர்மையான, ஒழுக்கமான, பண்பாளரா இருக்கணும்னு நான் விரும்பறேன். கண்ட, கண்ட பொண்ணுங்களையெல்லாம் பார்த்து ஜொள்ளுவிட்டுக்கொண்டுத் திரியற ஒரு லோ கிளாஸ் ஆளைக் கட்டிக்க எனக்குக் கொஞ்சங்கூட விருப்பமில்லை.”

“நீ.. நீங்க என்ன சொல்றீங்க..?” – பதறினான்.

“உங்களைப் பத்தி நான் அரசல், புரசலாக அறிந்துவைத்திருந்த போதிலும், கண்கூடாகப் பார்க்க விரும்பினேன். அதுக்காகவே என் தோழியை ஒரு பிச்சைக்காரி வேஷத்துல நீங்க வர்ற வழியில் நிற்கவைத்து சற்றுத் தள்ளி ஆட்டோவில் நான் அமர்ந்திருந்தேன். உங்க நண்பரோடு அங்கே வந்த நீங்க ஒரு பிச்சைக்காரி என்றும் பாராமல் அநாகரீகமாய் நடந்துக்கிட்டீங்க. உங்களைப் பத்தி தெரிஞ்சுக்கத்தான் நான் அப்படி செய்தேன். உங்க அழுக்கு மனசைப் புரிஞ்சுக்கிட்டேன். நீங்க போகலாம்.”

வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு அடி. அதுவும் ஒரு பெண் மூலமாக. ஜாலி என்ற பெயரில் சும்மா வேடிக்கையாக செய்யும் செயல்கள் சில சமயம் எவ்வளவு விபரீதத்தை உண்டுபண்ணுகிறது என்பதை அறிந்து தெளிந்தான் ராஜ். இனி எந்தப் பெண்ணையும் பார்த்து கிண்டலடிக்கக் கூடாது என்ற தீர்மானத்துக்கும் வந்தான். ■

# பாலையில்...

ஓடக்காரன் குடும்பத்தோடு
ஒட்டகம் மேய்க்கின்றான்! - அவன்
ஓடக் கயிற்றைப் பேரீச்சையின்
இடுப்பில் முடிக்கின்றான் !

வாடைப்பனியில் ஆடைகள்தேடி
ஓலை பறிக்கின்றான்! - அவன்
கூடையில் எண்ணெய்க் கிணறுகள் இருந்தும்
கும்பியில் குமைகின்றான்!

நதிகளை விற்றவன்பாலைகள் வாங்கி
நாயாய் அலைகின்றான்! - அதை
விதிகளின் பேரால் விற்றுக் கொடுத்தவன்
விண்ணை அளக்கின்றான் !

மரங்கள் விதைத்தால் நதிகள் முளைக்கும்
குறிஞ்சிகள் கூத்தாடும்! - மலை
வரங்களில் முல்லை மருதம் நெய்தல்
மண்ணில் விளையாடும் !


ஒட்டகம் மேய்த்தவன் ஓடம் வாங்கும்
நாள்தான் வரவேண்டும் - நம்
பட்ட மரங்களில் பட்டுகள் துளிர்த்துப்
படைத்ததைப் பெறவேண்டும் !



**கவிக்கோ துரைவசந்தராசன்**



# அவளொரு மெல்லினம் அழியாத நல்லினம்



கொஞ்சவெனை அழைக்கின்ற கொவ்வை யிதழாள்
அஞ்சாத பெருவிழியால் அஞ்சிட வைப்பாள்
வஞ்சிமகள் அழகினிலே வஞ்சனை யில்லை
மிஞ்சிடாது நான்சுவைக்க அனுமதி இல்லை!

சின்னஇடை மின்னலைப்போல் தோன்றி மறையும்
என்னவொரு பேரழகி என்செய் வேன்நான்?
அன்னநடை தோற்றுவிடும் இவள்நடை கண்டு
கன்னியிவள் வாய்மொழியில் சொர்க்கமே உண்டு

கண்ணசைந்தால் நெஞ்சமெலாம் தந்தி யடிக்கும்
வண்ணமலர் அவளிடத்தில் செல்லத் துடிக்கும்
உண்ணுகின்ற உணவெலாம் மறந்தே போகும்
எண்ணமெலாம் அவளிலையேல் நொந்தே வேகும்!

அந்தகனாய் நானிருப்பின் நிம்மதி காண்பேன்!
முந்துகின்ற நற்கவியாய் கவிதைகள் தருவேன்!
சிந்துகின்ற வார்த்தைகளில் செந்தமிழ் கண்டே
உந்துகின்ற அவளழகால் மயங்கி வீழ்ந்தேன்!

அம்மம்மா இதுவென்ன அழகா என்று
தெம்மாங்கு பாடிநிற்கும் தேவியைக் கேட்டேன்
சும்மாதான் நின்றேன்நான் சுகமா என்றாள்!
நம்முடைய தமிழ்சேர்ந்தால் பேரழ கென்றாள்!

பங்கயமா மலர்போன்று முகத்தைக் கண்டேன்
சங்கடங்கள் ஓடிவிட சாத்தியம் என்பேன்
மங்கையரில் அவள்மட்டும் மாவழ கென்பேன்!
நங்கையர்க்கு நறுந்தமிழால் நயமுண் டென்பேன்!

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்

# வான்சிறக்கும் தமிழனின் தலைநிமிர வாழனும் !

உள்ளங்கை நெல்லிக்கனியை உண்ணாமல்
தொலைதூரக் கானல்நீரை அருந்தயேன் துடிக்கிறோம் ?
உனது விரல்நுனியில் அமரும் பட்டாம்பூச்சி
உணர்த்திச் செல்லும் மனிதநேய மாண்பை !

எவர்க்கும் உதவாமல் உடைந்த ஏணியை
முற்றத்தில் வைப்பது ஏனென்று புரியவில்லை ?
ஊருக்குள் பழமரம் எல்லோர்க்கும் உதவிடல்
யாவரும் அறிந்த உண்மை பொய்மையில்லை !

புரட்டிப் பார்க்காத புத்தகத்தின் பக்கங்கள்
நூலகத்து அறைக்குள்ளே வருத்தமுடன் உள்ளது !
எழுத்தாளன் எழுதி வைத்தக் கருத்தெல்லாம்
ஏங்கியே தவமிருக்கும் நிலைதனைச் சொல்லுது !

கல்லுடன் உறவாடி கற்பனைக்கு மெருகூட்டி
பாரெங்கும் சிற்பங்கள் புனரமைப்பை நாடுது !
கலைவண்ணம் ரசிக்கவொரு மனம் தேடி
சிலையாவும் சிற்பியின் புகழ்ப்பாடி நிற்குது !

திட்டமிடல் தமிழனுக்கு சாதகமாய் இருந்திட...
வாட்டமுறா மரபுக்கு நல்வழிகள் வகுக்கணும் !
மண்சார்ந்த வாழ்வுரிமை மக்களுக்கு வழங்கிட..
வான்சிறக்கும் தமிழனின் தலைநிமிர வாழனும் !

**கா.ந.கல்யாணசுந்தரம்**



# வாழ்வியல் தடமாற்றமும் வள்ளுவரின் தடுமாற்றமும்




## முனைவர் சு.மாதவன்

உதவிப் பேராசிரியர் தமிழாய்வுத்துறை
மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி (த) புதுக்கோட்டை 622001


மானுட வாழ்வியல் காட்டுமிராண்டி நிலையிலிருந்து கணினி, இணைய நிலையை வந்தடைந்திருக்கிறது. இதற் கிடைப்பட்ட பல்லாயிரமாண்டு காலப் பரிணாம வளர்ச்சியையும் பரிமாண நிலைளையும் உள்ளடக்கிக் கொண்டு உயர்ந்துள்ளது. தனிமனித குடும்ப, சமூக, அரசு நிலைகளில் மானுட வாழ்வியல் தத்தமக்கென ஒழுகலாற்று நெறிகளை உருவாக்கிச் செம்மைப் படுத்திக் கொண்டே இயங்குகிறது. மரபுகள், விழுமியங்கள், அறநெறிகள் மனிதனின் இயல்பு நிலைகளைக் செம்மைப்படுத்துகின்றன. தமிழர்களின் வாழ்வியலைச் சங்காலச் சமூக அகம், புறம் என்ற பாகுபாட்டுமுறை பல்வேறு இலக்கிய, இலக்கணங்களின்வழி உயிர்ப்புமிக்கதாக நிலவச் செய்யும் வல்லமையுடன் வாழ்கிறது. எனினும், காலந்தோறும் மானுட வாழ்வியல் தன் இயல்புக்கேற்ற மேன்மைக் கூறுகளைக் கொண்டிருப்பதைப் போலவே கீழ்மைக் கூறுகளையும் கொண்டிருக்கத்தான் செய்கிறது. இதை வாழ்ந்துணர்ந்து அறிந்த சான்றோர் பெருமக்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் பாங்கை இலக்கிய ஆவணங்களில் கண்டறியலாம். அத்தகைய இலக்கிய ஆவணங்களில் தலைமை சான்றது திருக்குறள்.

கால மாற்றங்களுக்குரிய அறநெறிப் புரிந்துணர்வு மாற்றங்கள் வள்ளுவ நெறியிலும் தேவைப்படலாம். ஆனால், மனித இயல்புநிலைகளை மதிப்பிட்டுரைப்பதில் வள்ளுவத்திற்கு நிகர் வள்ளுவமே. மானுட வாழ்வியலில் தொடர்ச்சியாய்ப் பின்பற்றத்தக்க தடங்கள் - நெறிகள் ஏராளம்... ஏராளம்.... ஏராளம்... இவை சமூக இயங்கியலின் உற்பத்திப் பொருண்மைகள் மனிதர்கள் சமூகமாக இயங்குவதால் கிடைத்தவை; கிடைப்பவை இவை. இவை சமூக மனிதனின் மேன்மைநிலை இயல்புகளை - சமூக மேம்பாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் காட்டுபவை. சமூக மனிதன் மனிதர்கள் அல்லாத தனிமனிதன் மனிதர்களின் இயல்புநிலைகளில் மேன்மைக் கூறுகளைப் போலவே கீழ்மைக் கூறுகளும் இயங்குகின்றன. அவை சமூக இயங்கியலில் - அறநெறிப் பண்பாட்டு வாழ்வியலில் தெறிப்புகளையும் விரிசல்களையும் குளறுபடி களையும் ஏற்படுத்துபவை. இவை வாழ்வியல் தடமாற்றங்களை உருவாக்குபவை. இவற்றை யெல்லாம் நுண்ணிதின் நோக்கி மானுட வாழ்வியல் மேன்மைக்கெனவே குறள்படைத்த வள்ளுவன் ஒரே ஒரு குறளில் அறநெறி முடிவு கூறமுடியாமல் தடுமாறுகிறான் என்பதைக் கூறவே இக் கட்டுரை.

வள்ளுவ வாழ்வியல் கோட்பாட்டு உறுதிநிலைக் கூறுகள்.

தமிழ மானுட வாழ்வியலையும் அதன் பன்முகக் கருத்தியல் தளங்களையும் வாழ்ந் துணர்ந்தறிந்த வள்ளுவர் உலக மானுடமே போற்றத்தக்கதும் பின்பற்றத்தக்கதுமான வள்ளுவத்தை வடித்துத் தந்துள்ளார். தமிழின் இதர இலக்கியப் பெரும்பரப்பின் விழுமியத் தகுதிப்பாடும் வள்ளுவத்தின் விழுமியத் தகுதிப்பாடும் ஒரே துலாக்கோலில் சீர்தூக்கத் தக்கவை. அத்தகைய விழுமிய வாழ்வியல் கோட்பாட்டு உறுதிநிலைக் கூறுகளை வள்ளுவத்திலிருந்து கீழ்வருமாறு கணிக்கலாம்:

1. வள்ளுவத்துக்கு முந்தைய காலத் தமிழர் வாழ்வியல் கண்டெடுத்த கோட்பாடுகள்

2. வள்ளுவரேகண்டெடுத்தகோட்பாடுகள்

இவற்றுள், முதலாவது வகை வாழ்வியல் கோட்பாடுகளை வள்ளுவர் குறிப்பிடும்போது 'என்ப','என்பது'இ'எனப்படுவது','யாதெனில்', 'யாதெனின்', 'மாசுஅற்றார் கோள்' போன்ற சொற்பதிவுகளோடு வரையறுக்கிறார். இரண்டாவது வகை வாழ்வியல் கோட்பாடுகளை 'எவன்', 'எவனோ', 'என்னாம்', 'என்ஆற்றும்', 'என்னைகொல்', 'என்', 'எவன்கொலோ', 'உண்டோ' போன்ற சொற்பதிவுகளோடும் தேற்றேகாரம், வினாவேகாரம், பிரிநிலையேகாரம், ஈற்றசையேகாரம், விளியேகாரம் ஆகிய ஏகாரப் பதிவுகளோடு; 'வைக்கப்படும்', 'நினைக்கப்படும்' போன்ற சொற்றொடர்ப் பதிவுகளோடும் 'யாம் அறிவதில்லை', 'யாம்மெய்யாக் கண்டவற்றுள்', 'யாம்கண்டது இல்' என்ற தொடரமைப்புப் பதிவுகளோடும் வரையறுக்கிறார்.

இவ்வாறெல்லாம் அமையும் வள்ளுவ வாழ்வியல் கோட்பாடு உறுதிநிலைக் கூறுகள் விரிவான நுண்ணாய்வுக்குரியவை.

முன்னோர் மொழிபொருளே பொன்னேபோல் போற்றுவதும் புதியன புகுத்தலுமான தன் சமூகக் கடமையைத் தெள்ளிதின் ஆற்றிய வள்ளுவ வாழ்வியலின் பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்பது தெளிவு.

## வாழ்வியல் கோட்பாட்டுத் தடமும் தடமாற்றமும்.

மானுட வாழ்வியல் கோட்பாடுகளைத் தருகிறது. கோட்பாடுகள், நெறிகளை; நெறிகளின் தடங்களை அமைக்கின்றன. வாழ்வியல்நெறித் தடங்களின்வழியில் வாழ்க்கை நடைபோடுகிறபோது வாழ் வியல் செம்மையாகிறது. வாழ்வியல் ஒழுகலாறுகள் தடங்களைவிட்டுத் தடம் மாறுகிறபோது வாழ்க்கை தடுமாறுகிறது. சமூக வாழ்க்கையின் இயற்கைப் போக்கி லும் தனிமனித வாழ்க்கையின் இயற்கைப் போக்கிலும் இதைக் கண்ணுறமுடியும்.

தனிமனிதர்களின் இணைவு சமூக இயங்கியலாகிறது; சமூகம் இயங்குகிறது. ஒத்தது அறிதலும் ஒப்புரவு அறிதலும் மனித உடைமைகள் பத்தும் வள்ளுவ வாழ்வியல் கோட்பாட்டுத் தடங்களை வடிவமைக்கிறது; செயற்படுத்துகிறது; செம்மைப்படுத்துகிறது. இவற்றுள் ஏற்படும் புரிதல்சிதைவுகள் சமூகச் சிதைவுகளுக்குக் காரணங்களாகின்றன. இத்தகைய சமூகநெறிச் சிதைவுகளே வாழ்வியல் தடமாற்றத்தின் அடிக்கற்கள். அடிக்கற்களின் தடமாற்றத்தால் சமூக இயக்கம் தடுமாறுகிறது.

ஆக, தடம் என்பது மானுடம் பயணித்த / பயணிக்க வேண்டுமென்ற இயக்குநெறி; இலக்குநெறி, இவ் இயக்குநெறி அதற்குரிய இலக்கு நெறியிலிருந்து வழுவும்போது தடமாற்றம் நிகழ்கிறது. தடமாற்றமானது இலக்குநெறியிலிருந்து வழுக்குநெறியாகி இழுக்குநெறியாகிறது. இவை, மானுட வாழ்வியலின் இயல்பான போக்கில் நிகழ்வனவே. அவ்வப்போது மானுடம் தன் இலக்குநெறித் தடத்தைப் பற்றி முன்னேறுகிறது.

## வள்ளுவ வாழ்வியல் கோட்பாட்டுத் தடங்கள்.

'மாசற்றார் கோள்', என்பது 'புலம்வென்ற காட்சி', 'மாசறுகாட்சி', 'நடுக்கற்ற காட்சி',

‘கடனறி காட்சி’, ‘துளக்குற்ற காட்சி’ போன்றவற்றால் கிடைப்பது. வள்ளுவம் சொன்ன மாசற்றார் கோளுக்குச் சான்று வள்ளுவமே, ஏனெனில், வாழ்வியல் நுட்பத்தை ஒட்பமாக ஆய்ந்து திட்பமாய்ச் சொன்னது வள்ளுவம் மட்டுமே. தமிழில் மட்டுமல்ல, மானுட மொழிகள் எந்தவொன்றிலும் வள்ளுவத்துக்கு நிகரான நூலிருக்க வாய்ப்பில்லை. அத்துணை ஈடிலாப் பீடுடைய வள்ளுவ வாழ்வியல் திருக்குறள் முழுமைக்குமாகப் பரவித் திளைக்கிறது.

வள்ளுவ வாழ்வியல் என்பது அறம், பொருள், இன்பம் என்று பாடுபொருள் சார்ந்து முப்பால்களால் இயன்றது. ஆனால், சங்கமரபின்படி அணுகினால், அகவாழ்வியல், புற வாழ்வியல் என்று இரு பகுப்புக்குள் அடங்கிடும் தன்மையது. தனிமனிதர்களின் அகச்செம்மை குறித்துப் பேசுமிடங்களில்லாம் அக வாழ்வியல் கோட்பாட்டுத் தடங்களையும் குடும்ப - சமூக மனிதர்களின் புறச்செம்மை குறித்துப் பேசுமிடங்களிலெல்லாம் புறவாழ் வியல் கோட்பாட்டுத் தடங்களையும் போட்டு வைத்துள்ளது வள்ளுவம்.

தடங்களை இயக்கும் வாழ்வியல் செயல்நெறிகளெல்லாம் இருவேறு பொருளி யல்களுக்குள் இயக்குகின்றன. அவை முறையே,

1. பருப்பொருளியல்

அதாவது, கட்புலனாகும் பொருள்கள், வாழ்வியலில் ஏற்படுத்தும் தடங்கள் / தடமாற்றங்கள்

2. நுண்பொருளியல்

அதாவது, சிந்தனைப் புலனாகும் பொருள்கள், வாழ்வியலில் ஏற்படுத்தும் தடங்கள்/தடுமாற்றங்கள். ஆகியனவாகும். பருப்பொருளியலால் உயிரியல் நுகர்வும் நுண்பொருளியலால் வாழ்வியல் நுகர்வும் தொழிற்படுகின்றன.

இத்தகைய பருப்பொருளியலுக்கும் நுண்பொருளியலுக்குமான இணைவு, எதிர்வுகளே வாழ்வியலின் தடங்களை அமைக்கின்றன் தடமாற்றங்களை விளைக்கின்றன.

வள்ளுவர் பருப்பொருளியலைப் பொருட்பாலிலும் நுண்பொருளியலை அறத்துப்பாலிலும் காமத்துப்பாலிலும் வரையறுத்தார். இதனால்தான் வள்ளுவர் ‘பொருளுடைமை’யை எந்த ஒரு இடத்திலும் ‘உடைமை’ எனக் கொள்ளவில்லை. மாறாக, விழுமிய பண்பறநெறிகளையே ‘உடைமைகள்’ (10) என்றார். இன்னும் நுணுகிநோக்கினால், பருப்பொருடைமை சார்ந்து பேசும் பொருட்பாலிலும் ஐந்து உடைமைகளை இடைமிடைத்தார். ஏனெனில், பருப் பொருளுடைமையும் நுண்பொருளுடைமையினாலேயே சிறக்கும் என்பது வள்ளுவ நோக்கு.

இவ்வாறெல்லாம் தெளிந்த வரையறை களோடு வாழ்வியலை அணுகினாலும், பின்பற்றினாலும் பருப்பொருளியல் நோக்கு நுண்பொருளியலை அவ்வப் போது வீழ்த்தத்தான் செய்கிறது. இது மானுட வாழ்வியல் இயற்கையும் சமூக இயங்கியலுமாகும்.

## வாழ்வியல் தடமாற்றமும் வள்ளு வரின் தடுமாற்றமும்.

மேலே கண்ட பருப்பொருளியல் வாழ் வியல் நுண்பொருளியல் வாழ்வியலை நோக்கி வரவிடுவதில்லை. மாறாக, பருப் பொருளியல் நுகர்வு நுண்பொருளியல் சிந்தனையைத் தடுத்துவிடுகிறது. ஏனென்றால், பருப்பொருளியல்தேவைகளின்நிறைவில்தான் உயிர் வாழ்வியல் நிறைவு பெறுகிறது. எனவே, பருப்பொருளியல் வேட்கையும், தேடுதலும் வாழ்வியலின் இன்றியமையாத செயன்மைகளாகிவிடுகின்றன. இவ்வாறான, பருப்பொருளியல் வேட்கையின் விளை வால் அடக்கமின்மை, அருளின்மை, அவா, அழுக்காறு, அறிவின்மை, அன் பின்மை, ஆள்வினையின்மை, இரவு, இனியவை கூறாமை, இன்னா செய்தல், உட்பகை, ஒப்புரவின்மை, ஒழுக்கமின்மை, கண்ணோட்டமின்மை, கயமை, கள்ளம், கூடா ஒழுக்கம், கூடா நட்பு,

கொடுங்கொன்மை, கொலை, சான்றாண்மை இன்மை, சிற்றினஞ்சேரல், சூது, தீ நட்பு, தீவினை, நல்குரவு, நன்றியில் செல்வம் சேர்த்தல், பண்பின்மை, பிறனில் விழைதல், புறங்கூறுதல், பெரியோரைப் பிழைத்தல், பேதைமை, பொறையின்மை, மானம் இழத்தல், மெய்யுணர்தலின்மை, வலியறியாமை, வாய்மையின்மை, வெகுளி, வெஃகுதல், வெருவந்த செய்தல் என்றவாறு தனி மனித வாழ்வியலையும் சமூக வாழ்வியலையும் கீழ்மைப்படுத்தும் போக்குகள் மிகுகின்றன. இத்தகைய கீழ்மைப் போக்குகள் இல்லாத உலகம் உருவாக வேண்டும் / உருவாக்க வேண்டும் என்பதே வள்ளுவத்தின் இலக்குநிலை.

வள்ளுவர் தன் உயர்சிந்தனையால் மானுட வாழ்வியலைச் செம்மைப் படுத்தத்தக்க நெறிமுறைகளைப் பலவாறு முன்மொழிகிறார். தான் முன்மொழிந்த நெறிமுறைகளனைத்தையும் பருப்பொருளியல் தேவைகள் அழித்துவிடுவதைக் கண்ணுறு கிறார். வாழ்க்கை என்பது பருப்பொருளால் இன்பம் துய்ப்பதாய் இருந்தபோதிலும், அந் நுகர்வில் நெறிமுறைகள் தேவை என்பதால் அறமுரைக்கிறார். என்னதான் அறமுரைத்தாலும் இறுதியில் பொருளியல் வாழ்க்கையில் கயமைதான் மிஞ்சுகிறது என்பதே வள்ளுவரின் வாழ்வியல் கண்டுபிடிப்பு. எனவேதான், அறத்துப்பால், பொருட்பால் இரண்டின் நிறைவாய் 'கயமை' அதிகாரத்தை வைத்துள்ளார் என்பது எண்ணிஎண்ணி நகுவதற்குரியது.

இவ்வாறெல்லாம், வாழ்வியலில் நிகழும் தடமாற்றங்களைக் கண்ட வள்ளுவர் இவற்றுக்கெல்லாம் காரணமாகத் திகழும் ஒரு மனிதப் பண்பைக் கண்டறிகிறார். அதுதான் கயமை. கயமைத் தன்மை நிரம்பியவன் கயவன் என்றால் அவனுடைய செயல்பாடு எப்படியிருக்கும், தோற்றம் எப்படியிருக்கும், வெளிப்பாடு எப்படியிருக்கும் என்று ஒரு கேள்வியை எழுப்பிச் சிந்தித்து விடையிறுக்கிறார். கயவனும் மனிதனைப் போலவே இருப்பான்; அவனுக்கான ஏதோ ஒரு குறியீட்டை - வெளிப்பாட்டைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் அவ்வாறு என்னால் கண்டறிந்து சொல்ல முடியவில்லை என்கிறார் வள்ளுவர்.

'என்னால் கண்டறிந்து சொல்ல முடிய வில்லை' என்று வள்ளுவரே தடுமாறிய ஒரேஒரு இடம் இதுதான். வள்ளுவரையே தடுமாற வைத்த கயமை அதிகாரத்தின் முதற்குறள் இதுதான்:

"மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பார் யாம்கண்டது இல்"

(108:1)

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றும் 'யாம் மெய்யாக் கண்டவற்றுள்' என்றும் மானுட வாழ்வியலுக்கான தடம் அமைத்த வள்ளுவர், பருப்பொருளியல் நுகர்வால் வாழ்வியல் தடமாற்றங்கள் நிகழ்வதைக் கண்ணுறுகிறார். இத் தடமாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது இக் கயமைக் குணமாகும் என்பதைக் கண்டு அறிவிக்கிறார்.

வாழ்வியல்தடமாற்றத்தைஉற்பவிக்கும் கயமைக் குணம் ஒழிந்த சமூகமே மனிதநேய வாழ்வியலை - சமத்துவ வாழ்வியலை உற்பவிக்கும் என்பது வள்ளுவரின் அறவியல் நோக்குநிலை.

ஆனானப்பட்ட வள்ளுவரையே தடுமாற வைக்கும் கயமைக்கு முன்பாக நாமெல்லாம்...?! எனவே, ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் எதிர்படும் இந்தக் 'கயமை' ஒழிந்த சமூகம் அமைப்பதே வள்ளுவருக்கு நாம் செய்யவேண்டிய செய்ந்நன்றியாகும். ஏனெனில்,

'எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பதும் வள்ளுவநெறியல்லவா?!

வள்ளுவத்தை வாயால் போற்றாமல்
வாழ்க்கையால் போற்றுவோமாக!

■

# நிறம் மாறும் காதல்



R.விஜயலட்சுமி

மாலையின் மஞ்சள் வெய்யில் முகத்தில் பட தங்கநிறத்தில் ஜொலித்தது. அவள் முகம் குளத்தங்கரையில் அமர்ந்து தன் கைகளால் முகத்தை தாங்கி ஏதோ யோசனையில் அமர்ந்திருந்தாள், ரோஹினி.

அவள் மனம் முழுவதும் ராஜ்குமாரின் நினைவுகள் மட்டுமே நிரம்பியிருந்தது. தான் அவனை நிராகரித்தது சரியா? சரியென்றால் அவள் நினைவுகளையும் அல்லவா மறக்க வேண்டும். ஏன் இந்த மனம் இவ்வளவு அடம் பிடிக்கிறது. 30 ஆண்டுகாலம் ஆகியும் அவனை மறக்க முடியாமல் செய்வது எது?

கல்லூரி நாட்களில் இருவரும் காதலர் கள். ரயில் பயணங்களோடு இவர்கள் காதல் பயணமும் தொடர்ந்தது.

கல்லூரியில் அவன் சீனியர். அவன் மூன்றாவது ஆண்டிலும், இவள் முதல் ஆண்டிலும். கல்லூரியில் சேர்ந்த ஒரு வாரத்தில் ரோஹினி ஒரு நாள் புத்தகங்களை மார்போடு அணைத்து மூச்சுவாங்க ஓடிவந்தாள். டிரேயின் மெதுவாக நகர ஆரம்பிக்க இவள் ஏறும் முயற்சியில் ஒரு கரம் அவனை இழுத்து பிடித்து உள்ளே தள்ளியது..

ரோஹினி படபடப்பும், பயமுமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள். சந்தனநிறம், சுரள் கேசம், 6 அடி உயரம், குறும்பு பார்வை. இவளின் இதயம் முன்னைவிட அதிகமாக துடித்தது.

ஏங்க, இப்படி ஓடற ரயில்ல ஏறுறீங்க! அடுத்த டிரெயின்ல வரவேண்டியதுதானே? என்ற அவனது வார்த்தைகள் ஏதும் இவன் காதில் விழவில்லை. தேங்க்ஸ் என்ற வார்த்தைகள் உதடுகளுக்கே சிக்கிக் கொள்ள வெறும் காற்று மட்டுமே வாயில் இருந்து வெளிப்பட்டது.

அவளின் இரட்டை பின்னலும், ஜிமிக்கியும், பாவாடை தாவணியும், படபடக்கும் விழிகளும் ராஜ்குமாரை கிரங்கடிக்க, அவன் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

ஒரு பத்து நாட்கள் கழித்து அவள் கல்லூரி கேன்ட்டீனில் நண்பர்கள் புடைசூழ அரட்டையும், கையில் டீ கப்பும்... ரோஹினி அவனை கவனிக்காமல் கடந்து சென்று மதிய லஞ்ச்சுகாக தக்காளி சாதம் வாங்கி தோழிகளை தேடி சென்றாள்.

ராஜ்குமாரின் அரட்டை சட்டென நிற்க இவளா? என்று சட்டென கேட்க... யாருடா அவ என்றான் அகிலன்.. இவள போன வாரம்தான் டிரெயின்ல பார்தேன்.. ஆனா நம்ம காலேஜ்னு தெரியாதுடா?

ஓ.. யாரு அந்த தாவணியா? பர்ஸ்ட் இயர் மேத்ஸ்... என்றான் அகிலன்.

அப்படியா அவள் பார்வையில் பட வேண்டும் என்பதற்க்காக எதிர் டேபிளில் அமர்ந்தான்... தோழிகளோடு அரட்டை அடித்து கொண்டே சாப்பிட வாயை திறந்தவள், இவனை பார்த்தும் சட்டென தலை குனிந்தாள்... பின்பு மெல்ல கண்களை உயர்த்தி அவனைப் பார்க்கவும், அன்று போலவே இதயம் படபடத்தது...

என்னடி சாப்பிடாம உக்காந்துருக்க க்ளாஸுக்கு லேட்டாச்சு என சாந்தி அழைக்க, பாதி சாப்பிட்டதோடு, வகுப்புக்குச் சென்றாள்...

அடிக்கடி டிரெயினிலும் கல்லூரியிலும் இருவர் விழிகள் மட்டுமே பேசின... அதற்குள் செமஸ்ட்டர் விடுமுறை வர தேர்வுகளும், இருவருக்கும் மாறி மாறி வர, இரண்டு மாதங்கள் பார்க்க முடியவில்லை. இந்த பிரிவில் ரோஹினி அவனை காதலிப்பது புரிந்தது. அவனும் இவளை பார்க்காமல் ஏதோ பறிகொடுத்தது போல... இருந்தான்...

அதன்பின் வந்த நாட்களில் ஓரிரு கடிதங்கள் ரிக்கார்டு நோட்டின் வழியே பயணித்தது. மூன்றாமாண்டு முடிவில் ராஜ்குமார் ஒரு நாள் நான் PG படிக்க சென்னைக்கு போறேன். உன் முகவரி கொடு, கடிதம் எழுதுகிறேன் என்றான்... தொலைபேசி, அலைபேசி இல்லாத காலம்...

என் வீட்டுக்கு கடிதம் எழுதினாலும் என்னால வாங்க முடியாது. நீங்க கல்லூரி முகவரிக்கே எழுதுங்க என்றவளின் கண்ணீரை துடைக்க முயன்று தோற்றுப் போனான்.

ரோஹினி B.sc, முடிக்கவும் ராஜ்குமார் M.sc முடிக்கவும் சரியாக இருந்தது... விடுமுறையில் எப்போதேனும் சென்னையிலிருந்து தஞ்சாவூர் வருவான்... தன்னோட லட்சியமே சிவில் சர்வீஸ் எழுதி IPS ஆறதுதான் என்றான். பரவாயில்ல. நானும் M.sc, படிக்கிறேன்.. நீங்க தேர்வு எழுதி முடிக்கிற வரைக்கும் காத்திருக்கேன் என்றாள்...

ரோஹினியின் வீட்டிலும் சண்டைப் போட்டு M.sc, சேர்ந்தாள். இரண்டு வருடம் முடிந்தது... தேர்வில் பாஸாகி, டிரெயினிங் என ராஜ்குமார் டில்லி சென்றாள்... இவளும் M.phil முடித்து ஒரு கல்லூரியில் லெக்சரராக சேர்ந்தாள்....

இனி வீட்டில் பேசுவதில் எந்த பிரச்சினையும் இல்லை. 8 வருட காதல் வாழ்க்கை திருமணத்தில் முடியும் அழகான தருணத்தில் கனவோடு ரோஹினி...ராஜ்குமார் ஒரு நாள் வீட்டிற்கு வந்து முறைப்படி பெண் கேளேன்... எங்கப்பா ஸ்கூல் டீச்சர்தான். ஆனாஉங்கப்பாபோலீஸ்டிப்பார்ட்மெண்ட்... அதான் பயமா இருக்கு... என்றான் ரோஹினி...

சரி.. ரோஹினி இந்த எட்டு வருஷத்துல நாம ஒரு நாள் கூட முழுசா எங்கேயும் போனதில்லை... நீ சனி, ஞாயிறு ரெண்டு நாள் வீட்ல எதாவது சொல்லிட்டு வா... நாம நம்ம எதிர்காலத்த பத்தி நிறைய பேசனும் என்றாள்.

ரோஹினியும் தோழியின் திருமணம் என்று வீட்டில் சொல்லி சென்னை கிளம்பினாள்.

சென்னை எக்மோரில் இவனுக்காக ராஜ்குமார் காத்திருந்தான்... காரில் ஏறு எனக் கட்டளை இட்டவனிடம் எங்கே போகிறோம்? என்றாள் ரோஹினி...

மகாபலிபுரம்... அமைதியா இருக்கும் என்றவாறு காரை செலுத்தினாள்... ஓர் அழகான அறையில் ரோஹினி குளித்து, சாப்பிட்டு, ரிலாக்ஸானாள்... வரிசையாக ரிசார்ட் அறைகள் தென்னைமரங்களுக்கிடையே அழகாக இருந்தது.

முன்பிருந்த பார்க்கில் சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர்...

காரில் இருவரும் கடற்கரை சென்று கைகோர்த்து மணலில் நடக்க... ராஜ்குமார் சிறிது மாறிவிட்டிருந்தான். அவனுடைய நடையில் மிடுக்கும் அலட்சியமும் இருந்தது. ரோஹினி ஓரளவுக்கு அதை ரசித்தாலும், கல்லூரி நாட்களில் அவனிடமிருந்த ஒரு

நளினமும், வெகுளித்தனமும் தொலைந்து போய்விட்டதைஉணர்ந்தாள்.கடற்கரையில் பேசிவிட்டு காருக்கு திரும்பிய ராஜ்குமார் மிகவும் கோபத்துடன் இருந்தான்.அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இவன் காரின் வியூமிர்ரரை உடைத்து விட்டிருந்தனர்... அதனால் அவர்கள் மேல் கோபமாக இருந்தாள்.

போகட்டும்... விடுங்க சின்ன பசங்க ஏதோ தெரியாம பண்ணிட்டாங்க என்ற ரோஹினியின் சமாதான பேச்சு அவன் காதில் ஏறவில்லை.

முதன் முதலில் அவனோடு வெளியே, காதலோடு வந்திருக்கும் அழகுதேவதை ரோஹினியின் முகம் பார்க்கக் கூட மறுத்து பிடிவாதமாக முகத்தை இறுக்கமாக வைத்திருந்த ராஜ்குமாரை பார்க்க, பயமாக இருந்தது ரோஹினிக்கு...

அறைக்குள் வந்து சாப்பிட்டு கட்டிலில் படுத்திருந்த ராஜ்குமாரின் அகன்ற சட்டை யில்லாத பனியனோடு, அவனை பார்த்தும், அவன் மார்பில் சாய்ந்தாள்... அவனும் அவனை இறுக்கி அணைத்து தலையை கோதினாள்... திடீரென காலிங்பெல் அடிக்க... அவனை நீங்கி வாசல் கதவை திறந்தாள். யாருமில்லை.. மீண்டும் வந்து ரோஹினியின் நெற்றியில் முத்தமிட.. மறுபடி அழைப்பு மணி வேகமாக சென்று கதவை திறக்க.. களுக்கென சிரித்து ஓடியது ஒரு குட்டிப்பெண் ரோஹினி அக்குழந்தையின் குறும்பினை ரசித்து கைத்தட்டி சிரிக்க....ஸ் ராஜ்குமார் கோபத்துடன் அக்குழந்தையை திட்டினாள்.

என்ன இது விடுங்க... சின்னபொண்ணு என்று ரோஹினி சொல்லியதை காதில் வாங்கவில்லை...

ராஜ்குமாரின் இந்த கோபம் நிறைந்த பேச்சும், நடவடிக்கைகளும் ரோஹினிக்கு புதுசா இருந்துச்சு...

காதலிக்கும்போதுஇவனுடையமற்றொரு முகத்தை பார்க்க தவறி விட்டோமோ! என்ற



யோசனையில் ஆழ்ந்தாள்...

சாப்பிடும் போது அவளுக்கு இலையை போட்டு பார்த்து, பார்த்து மரிமாறினாள்.. இந்த பாட்டைக்கேளேன் என்று 'பொன்மேனி தழுவாமல், பெண் இன்பம் அறியாமல் போக வேண்டுமா' பாட்டு ஹிந்தியில்.

டேபிளில் கொட்டிய ஜீனியை மெல்ல ஒருதட்டில் எடுத்து வாஷ்பேஷனில் கழுவி விட்டாள்...

பரவாயில்லையே... இத டஸ்ட்பின்' ல போடுவியோன்னு நினைச்சேன். எறும்பு வந்திருக்கும்... தண்ணிலே கழுவிட்ட.. அறிவுதான் என்று மெச்சினான்...

சாப்பிட்ட இலையை எடுத்து டஸ்ட்பின்' ல ரோஹினி போடும்போது சிறிது டேபினில் சிதறிவிட...இப்பதான்ஸ்மார்ட்னுசொன்னேன்.. அதுக்குள்ள இப்படி முட்டாள்தனமா.. செஞ்சி

வச்சிருக்க... என்று ராஜ்குமார் சொன்னதும்... புரிந்தது... தன் வேலையை ஒரு போலீஸ் கண்ணோடு பார்க்கிறான் என்பது...

நிறைய காதலுடனும் சிறிது குழப்பத்துடனும் பிரிந்தாள்... யோசித்தாள்... படிக்கும்போது மிக ஜாலியாக நண்பர்களுடன் சுற்றிக் கொண்டிருந்தவனை இவனுடைய போலீஸ் டிரெயினிங் மாற்றியிருக்குமோ! என்ற யோசனையுடன் தூங்கிபோனாள்...

ரோஹினிக்கு பின் இரண்டு தங்கைகள், ஒரு தம்பி.. மிடில்கிளாஸ் குடும்பம்தான்... ராஜ்குமாரைப் போல வசதியான குடும்பம் இல்லைதான்...இருந்தாலும் அவனிடம் அதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை... மறுநாள் தன் நண்பர்கள் சில பேருக்கு அறிமுகப்படுத்த ஒரு ஹோட்டலுக்கு அழைத்திருந்தான்..

ரோஹினியும் கல்லூரியில் இருந்து நேராக அவனையும் அவன் நண்பர்களையும் சந்திக்க வந்தாள்...

லிப்ட்டில் ஏறும் போதே ராஜ்குமார் சிடுசிடுத்தான்..என்ன புடவை இது... பூனம் புடவையும் 20 ரூபாய் செயினும்... என்றபோது கண்ணில் எட்டி நின்ற கண்ணீரை துடைத்தாள்...

சிறியஅறிமுகம்..நான்வீட்டுக்குபோகணும் அப்பாத் தேடுவாங்க.. என்றவாறுஹேன்ட் பேக் மாட்டி கிளம்பினாள்... அவனும் சரி என்ற தலையாட்ட லிப்ட் வரை வந்தவள்..குடையை மறந்து விட்டோமே என திரும்பினாள்...

காதலிக்கும்போது இவள் பாவாடை, தாவணியை ரசிச்சு, ரசிச்சு, லெட்டர்ல எழுதினவன்.. இன்னைக்கு, இப்படி சொல்றான்... ஜாலியாசிரிச்சு,சிரிச்சுபேசுனவள் முழுசா கோவகாரனாயிட்டான்... இவ சேர்ந்து வாழ முடியுமா என்று யோசித்து.. ஒரு முடிவுடன் காலையில் அவனை சந்தித்து நீங்க பொண்ணுகேட்டு இன்னைக்கு சாயந்தரம் வீட்டுக்கு வரேன்னு சொன்னீங்களே... என்று முழுதாக பேசி முடிக்கறதுகுள்ள...

இல்ல ரோஹினி நான் இன்னும் கொஞ்சம் யோசிக்கனும் என்றான்...

ராஜ்குமார் எனக்கு உன்ன பிடிக்கல... காதலிக்கும்போது இருந்த என் ராஜ் குமாருக்கு ரோஹினிக்கிட்ட எல்லாமே பிடிச்சி இருந்துச்சு... ஆனா ஒரு போலீஸ் ஆபிஸரோட பொண்டாட்டியா வாழ ரோஹினிக்கிட்ட நீ எதிர்பாக்குற ஸ்டேட்டஸ் இல்ல... அதனால இந்த கல்யாணம் வேணாம்... நம்ம பிரியறதுதான் நல்லது என்றாள்.

இல்ல ரோஹினி அப்படி எல்லாம் இல்ல. நீ உன்ன கொஞ்சம் மாத்திக்கிட்டா எல்லாம் சரியாயிடும்.

நான் எதுக்காக என்னை மாத்திக்கனும் ராஜ்... நான் உங்ககிட்ட முத, முதல்ல அறிமுகமானப்போஎந்தமாதிரிஇருந்தேனோ அதே மாதிரிதான் இப்பவும் இருகேன்... ஆனா நீ தான் ரொம்ப மாறிட்ட...

உன்னோட ஸ்டேட்டஸ் வேற.. நான் மிடில் கிளாஸ் பொண்ணுதான் 200ரூ பூனம் புடவையும், 20ரூ கவரிங் செயினும்தான் என்னோட ஸ்டேட்டஸ்...

எனக்கு அப்புறம் இருக்க 2 தங்கச்சி, தம்பிய நான்தான் படிக்க வைக்கிறேன்.. என்னால 20 பவுன் நகையும், 200 ரூபாய் புடவையோடையும் வலம் வர முடியாது... மனசு பாத்து வர்றதுதான் காதல்.. உங்கிட்ட அது எப்பவோ காணாம போச்சு.... Good bye சொல்லி பிரிந்த நாள் டிசம்பர் 2...

30 வருடங்கள் திருமணம் செய்து கொள்ளாமல் அவனை மறக்கவும் முடியாமல் குளத்தங்கரையில் அமர்ந்திருந்தாள் ரோஹினி... அவனுடைய மாற்றங்கள் தான் பிடிக்கவில்லையே தவிர 8 வருடங்கள் உருகி, உருகி காதலித்த நாட்களையும்,கடிதங்களில் அவன் கொட்டித்தீர்த்த காதல்... அத்தனையும் மறக்க முடியாமல் நிறம் மாறிய காதலை நினைத்து அமர்ந்து இருந்தாள் ரோஹினி.

# ஹைக்கூ

பூங்கா ஊஞ்சலில்
துரு பிடித்து இருக்கிறது
தங்கம் என்ற பெயர்

மரங்கொத்தி பறவை
வண்ணமிழந்த படி
சிறுவனின் புத்தகத்தில்

பழைய மின்விசிறி
வட்டமிட்ட படி
சிலந்தி வலை

தெருக்குழாய் கடந்து
சுமந்து வருகிறான்
தண்ணீர் கேன்

பூங்கா இருக்கையில்
கொஞ்சிய படி
இரு கிளிகள்

பழுத்த இலை
சுவர் தாண்டி விழுகிறது
முதியோர் இல்லத்தினுள்

கரையும் காகம்
ஒன்று கூடுகிறது
இலையில் சோறு

உறக்கத்தை கலைத்துவிட்டு
மியாவ் மியாவ் என்ற படி
பக்கத்து வீட்டு சிறுமி

பணக்கார வீட்டு குழந்தை
அம்மா அப்பாவோடு வரைகிறாள்
குடிசை வீடு

தெருவில் பூக்காரி
முழம் போட்டு அளக்கிறாள்
அடுத்தவர் கதையை



# காதல்...

நீ கன்னத்தில்
கை வைத்து
உட்கார்ந்திருப்பது கூட
இதயத்தில்
கைவைத்து உட்கார்ந்திருப்பதை
போலத் தான் உள்ளது ...

காதலில் விழுந்து
எழுவதை விட
உன் கண்களில் விழுந்து
எழுவது அத்தனை
சுவாரஸ்யமாக
உள்ளது ...

உன் கண்களால்
கதை பேசி
செல்கிறாய்
இதயம் ம் கூட்டுகிறது

கிரிஜா.தி

திருப்பாற்கடல், வேலூர்


பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மே 2019


































Contact : editor@tamilnenjam.com